பதிவுஎண் 2041

தனிப்பிரதி விலை அணா ஒன்று




எல்லாரு மோர்குலம் எல்லாரு மோரினம்
எல்லாரு மிந்திய மக்கள்,
எல்லாரு மோர்நிறை எல்லாரு மோர்விலை
எல்லாரு மிந்நாட்டு மன்னர் (பாரதி)

[வாரப்பதிப்பு]


ஆசிரியர்
ஈ. வெ. இராமசாமி நாயக்கர்

பிறப்பொக்கு மெல்லா ... குஞ் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற் ... ான்
ஒழுக்க முடைமை குடி ... ழுக்க ...
மிழிந்த பிறப்பாய் விடும். (குறள்)

மாலை க | குரோதன-ஷு ஐப்பசி-மீ கரு-உ (1—11—25) ஞாயிற்றுக்கிழமை | மலர் உரு
ஈரோட்டினின்று ஞாயிறு தோறும் வெளிவரும்.

# வருட சந்தா ரூபாய் மூன்றுதான்.

## வெளிநாடுகளுக்கு வருட சந்தா ரூபாய் நான்கு.

மகாத்மா காந்திக்கு ஜே!

வந்தேமாதரம்! அல்லாஹு அக்பர்!!

### திருப்பூர் சுத்த கத்தர் ஜவுளிகள்.

தமிழ்நாடு கதர் போர்டாரால் அத்தாட்சிப்பத்திரம் பெற்ற எங்கள் டிப்போவில் பல ரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளைப் பீசுகள், ஷர்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடிச்சேலைகள், சால்வைகள், அச்சு வேஷ்டிகள் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். பிரதி ஆர்டருடன் 100க்கு 25 ரூ. வீதம் அட்வான்சு அனுப்பவேண்டும். வி. பி அனுப்ப முடியாத வெளிநாட்டு ஆர்டர்களுக்கு பூராத்தொகையும் முன் பணமாக அனுப்ப வேண்டும்.

ஆர். டி. முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர், (தென் இந்தியா.)

### காங்கிரஸ் அத்தாட்சி பெற்ற சுத்த கதர்!

தமிழ் நாடு காங்கிரஸ் கதர் போர்டின் விலைக்கே விற்கப்படும். எல்லா ரகங்களும் கிடைக்கும். விலை ஜாபிதாவுக்கும் மற்ற விபரங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்துக்கு எழுதவும். சாம்பிள் (மாதிரி)க்கு 4 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

கற்பக விநாயகர் கதர் நிலயம்,
மண்டி வீதி, ஈரோடு. (S. I. R.)

### திருப்பூர் சுத்த கத்தர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு உடனே ஆர்டர் செய்யுங்கள், ஆர்டர்கள் 100-க்கு 25 ரூபாய் வீதம் அட்வான்ஸ் அனுப்பவேண்டும். வி. பி. அனுப்பமுடியாத வெளிநாடுகளுக்கு பூராத்தொகையையும் முன் பணமாகவே அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்) தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி.

ஸ்ரீமான் என். கே சங்கரப்ப செட்டியார் கைநூல் கைத்தறியால் தயார் செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்குவிற்று வருகிறார்.

(ஒப்பம்) வா. மு. தங்கப்பெருமாள்
காரியதரிசி, கத்தர் இலாகா.

விலாசம்:—
என். கே. சங்கரப்ப செட்டியார், கத்தர் ஸ்டோர்,
திருப்பூர், (தென் இந்தியா)

### திருப்பூர் சுத்த கத்தர் ஜவுளிகள்.

பல ரகம்வேஸ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்பமுடியாத வெளிநாடுகளுக்கு பூராத்தொகையையும் முன்பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம் எஸ். சிதம்பரம் செட்டியார் முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத்தறியால் தயார் செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்தி செய்து நியாயமான விலைக்குவிற்றுவருகிறார்.

(ஒப்பம்) வா. மு. தங்கப்பெருமாள் காரியதரிசி கத்தர் இலாகா

விலாசம்:—
ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர், (தென் இந்தியா)

# செய்தித் திரட்டு.

மகாத்மா காந்தி கச்சு சமஸ்தானத்தில் சுற்றுப்பிரயாணம் செய்து வருகிறார். அங்கே பூஜ் என்னுமிடத்தில் கச்மகாராஜாவின் விருந்தினராக இரண்டு தினங்களிருப்பார்.

* * *

காந்தியடிகள், கட்சுக்குப் போகு முன் "மரணம் என்னை நெருங்கி வருகின்றது. எனது ஆசைகள் குறைந்த பாடுமில்லை; பூர்த்தியான பாடுமில்லை; எனக்கு உயிரான விஷயம் இன்னதென்று உங்களுக்குத்தெரியும். அதுதான் "ராட்டை" என "கப்பலுக்கு அவருடன் கூடச்சென்ற நண்பர்களுடன் கூறினாரும்.

* * *

நிலக்கோட்டை தாலூகா ஏழுவனப்பட்டியில், ஸ்ரீமான். அ. செ. ப. சுருளியாண்டி செட்டியாரின் நன்முயற்சியால், தேசியப்பாடசாலை ஒன்று ஏற்பட்டு, சென்ற நான்கு, ஐந்து மாதங்களாக ஒழுங்குடன் நடை பெற்று வருகிறது. இதில் பஞ்சம பிள்ளைகளும் சேர்ந்து 80 மாணவர்கள் வாசித்து வருகின்றனர். தேசிய முறையிலேயே கல்வி போதிக்கப்பட்டு வருகிறது. சுமார் 25 கைராட்டினங்கள் மூலமாக நூற்கும் தொழிலும் கற்றுக் கொடுக்கப்பட்டு வருவது பாராட்டத்தக்கதேயாம். இதைப் பார்வையிடும் பொருட்டு, ஸ்ரீமான். எஸ். கே. கதிர்வேலுப் பிள்ளையும், இன்னும் சில தேசாபிமானிகளும் வந்திருந்தனர். நன்றாய் நூற்ற மாணவர்களுக்குப் பரிசு அளித்தனர் என ஒரு நிருபர் நமக்கு அறிவிக்கிறார்.

* * *

தனவைசிய நாட்டுத் தமிழ்க் கல்வி சங்க ஆதரவில், அரண்மனைச் சிறு வயலில் ஸ்ரீமான். அரு. கா. முத்தையா செட்டியாரவர்களின் பொருள் உதவியால் கட்டப்பட்டுள்ள முத்தையா கலாசாலையை, பாகனேரி ஸ்ரீமான். பெரி. அழ. மு. முத்துக்கருப்பன் செட்டியார் சென்ற மாதம் 29-ந் தேதி திறந்து வைத்தனர்.

* * *

கதரைப் பற்றிய சிறந்த கட்டுரையொன்று ஆங்கிலத்திலேனும், ஹிந்தியிலேனும் எழுதியனுப்புவோருக்கு ரூ. 1000 பரிசளிக்கப்படுமென, மகாத்மா காந்தியின் வேண்டுகோளின்மீது பம்பாய் ஸ்ரீமான். ரவிசங்கர் ஜெகஜ் ஜீவன் என்பவர் வாக்களித்திருந்தது வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம். இப்பரிசு தமிழ் நாட்டைச் சேர்ந்த ஸ்ரீமான். என். எஸ். வரதாச்சாரிக்கும், பம்பாய் ஆசிரியர் பண்டாம் பேகர் என்பவருக்கும் அவர்களுடைய சிறந்த கட்டுரைகளுக்காக சமமாகப் பங்கிட்டுக் கொடுக்கப்படும் என காந்தியடிகள் "யௌவன இந்தியா"வில் தெரிவிக்கிறார்.

* * *

லாலா லஜபதிராய் அவர்கள் பஞ்சாப் மாகாண காங்கிரஸ் கமிட்டி தலைமைப் பதவியை ராஜிநாமாச் செய்து விட்டதாகவும், டாக்டர். கிச்லு காங்கிரஸ் அங்கத்தினர் பதவியை ராஜிநாமாச் செய்து விட்டதாகவும், "பிரதாப்" பத்திரிகை கூறுகின்றது.

* * *

இவ்வருடத்திய தமிழ் மாகாண மகாநாடு காஞ்சிபுரத்தில் நவம்பர் மாதம் 21, 22-ந் தேதிகளில் நடைபெறும். ஸ்ரீமான் திரு. வி. கலியாணசுந்திர முதலியார் மகாநாட்டின் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

* * *

சில தினங்களுக்கு முன், சென்னையில் நிர்வாக சபை அங்கத்தவராகிய கனம் மகமது உஸ்மான் சாய்பு அவர்களுக்கு ஒரு விருந்து நடைபெற்றது. இதற்கு, சுயாராஜ்யக்கட்சி அங்கத்தினர்களாகிய ஸ்ரீமான்கள். சிராமலு நாயுடு, டாக்டர் மல்லய்யா, பக்தவத்சலம் நாயுடு முதலியோர் போயிருந்தனராம்.

* * *

தோட்டிகளையும், இதர தாழ்ந்த வகுப்பினரையும் தீண்டாதாராக பாவித்து வருவது அக்கிரமமென்பதை ஹிந்து சமூகத்தார் உணரும்படி செய்வதற்காக, நாகபுரி வாசியாகிய ஸ்ரீமான். துளசிராம் போடி என்பவர் சென்றமாதம் 26-ந் தேதி முதல் உண்ணாவிரதமிருந்து வருவதாக ஓர் செய்தி கூறுகிறது.

* * *

மத்திய மாகாண, சுயராஜ்யக்கட்சி அங்கத்தினர் ஸ்ரீமான். தாம்பே நிர்வாக பதவியை ஏற்றுக் கொண்டதற்காக, அகில இந்திய சுயராஜ்யக்கட்சியின் உபதலைவர் ஸ்ரீமான், கேல்கர் வாழ்த்துச் செய்தி ஒன்று அனுப்பியிருக்கிறாராம்.

* * *

மகாத்மா காந்தியின் வலதுகை எந்த வேலைக்கும் பிரயோஜனப்படவில்லையென்றும், அவருடைய எழுத்து வேலைகளெல்லாம் (அவர் சொல்லி) வேறுயாராவது செய்ய வேண்டியிருக்கிறதென்றும், இடதுகையால் அவரே சில சமயங்களில் எழுதுவதாகவும் லாகூர் "லியலத்" பத்திரிகை கூறுவதாக 'ட்ரைப்யூன்' அறிவிக்கின்றது.

* * *

மசூலிப்பட்டணத்தில் சென்ற மாதம் 24-ந் தேதியன்று நடந்த ஆந்திர மகாநாட்டில் "தேவதாசிகள் விபசாரம் செய்யும் இழிவான வாழ்க்கையை விட்டுவிட வேண்டுமென்றும், தேவதாஸிகளை கல்யாண காலங்கள், உற்சவகாலங்கள் போன்ற புனிதமான காலங்களில் நர்த்தனம் முதலியவற்றிற்காக அமர்த்தக்கூடாதென எல்லோரையும் கேட்டுக்கொள்வதாகவும்" ஓர் தீர்மானம் நிறைவேறியிருக்கிறது.

* * *

கிழவர்கள் சிறு பெண்களைக் கலியாணம் செய்யலாகாது. தாரமிழந்தவர்கள் கன்னிகைகளையும், விதவைகள் பிரமசாரிகளையும் விவாகம் செய்யலாகாது. தாரமிழந்தவர்களும், விதவைகளும் விவாகம் செய்து கொள்ளலாம். அவர்கள் பிள்ளைகளுக்கு சகல உரிமைகளும் உண்டென்று ஜலந்தர் ஜில்லாவில் சுவாமி சிரத்தானந்தர் தலைமையில் கூடிய விதவா விவாக மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

* * *

சென்னை "நவசக்தி" பத்திரிக்கை தேசத் தொண்டிலீடுபட்டு தேசத்திற்கும் சிறப்பாக தமிழ் நாட்டிற்கும் சென்ற ஐந்து ஆண்டுகளாக அரிய தொண்டியற்றி, ஆறுவது ஆண்டுக்குள் பிரவேசித்திருக்கின்றது. இவ்வுயரிய பத்திரிக்கை யாதொரு கள்ளங்கபடின்றி இன்னும் நம் தாய் நாட்டிற்கும், தமிழுலகிற்கும் வேலை செய்து தீர்க்காயுளுடன் இந்நில வுலகில் பிரகாசிக்க, இறைவனை பிரார்த்திக்கிறோம்.

* * *

இந்து தேவஸ்தான போர்டு கமிஷனர் ஸ்ரீமான். பி. வி. நடராஜ முதலியார் அவர்கள் கோயமுத்தூர், சென்னிமலை முதலிய இடங்களைப் பார்வையிட்டுப் பின் சென்ற மாதம் 29-ந்தேதி ஈரோட்டுக்கு விஜயம் செய்தனர். இங்கு தேவஸ்தான கமிட்டி மெம்பர்கள் யாவரையும் சந்தித்தார். பின்னர், பவானி, கோபிசெட்டிபாளையம் முதலிய இடங்களுக்குச் சென்றார்.

* * *

1927-ஏப்பல் மாதத்திலிருந்து கிழிந்த நோட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படா. கிழிக்கப்பட்ட அரை நோட்டுக்குப் பாதிப் பணமே தரப்படும். மோசம் செய்வதைத் தடுக்கவும், கிழிந்த நோட்டுகளைப் பார்வையிடும் சிப்பந்திச் செலவைக் குறைக்கவும் இவ்வேற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதைப் பற்றிய ஆட்சேபங்கள் 1926-ஹூ மார்ச்சு மாத இறுதிக்குள் கூறப்பட்டால் அவை கவனிக்கப் பெறும் என ஓர் செய்தி கூறுகிறது.

* * *


மோதிரத்திலும் ஓர் ஆச்சரியம்!

**பாரிஸ் லேடிகளின் லீலாவிநோத போட்டோ மோதிரம்:**

இம்மோதிரத்தின் ஆச்சரியம் யாதெனில். இதில் கடுகளவு பிரமாணம் துவாரம் உண்டு. அதின் மூலமாகப் பார்க்க அதில் பாரிஸ்தேசத்தின் பெண்மணிகள் பலவித லீலைகளுடன் ஆனந்த சாகரத்தில் மூழ்கியிருப்பதையும், இன்னும் பலவித ஆச்சரியங்களும் காணலாம்.

இதன் கிரையம் 1-க்கு ரூ. 1-4.

**பாரீஸ் லேடிகளின் அழகிய பெட்ரூம் போட்டோ படங்கள்.**

இவை பார்ப்போர் மனதுக்கு குதூகலத்தையும், ஆனந்தத்தையும் விளைவிக்கும். பாரிஸ் தேச பெண்மணிகளின் ரூபலாவண்யமும், லீலா விநோதமும் இதில் காணலாம். பெட் ரூம்களில் வைப்பதற்கு இவை வெகு சுந்திரமாயிருக்கும்.

12-படங்கள் கொண்ட செட் 1-க்கு விலை ரூபாய் 2.

ஓ. எம். வி. கம்பெனி.
(23-வது பீட்) மதாரஸ்.

# மீண்டும் சத்தியமூர்த்தியின் அட்டகாசம்.

“சௌந்திரிய மஹாலின் இரகசியம்.”

“மீண்டும் சத்திய மூர்த்தியின் அட்டகாசம்” என்னும் தலைப்பின் கீழ் சௌந்திரிய மஹாலில் சில தினங்களுக்கு முன் நடந்த மீட்டிங்கைப் பற்றி ஒரு நிருபர் அக்டோபர் மீ 15-ந் தேதி ஜஸ்டிஸ் பத்திரிக்கையில் எழுதியிருப்பதின் சாரம்சமாவது:— சென்னை சுயராஜ்யக் கட்சியின் பிரதம புருஷராகிய, ஸ்ரீமான். சத்திய மூர்த்தியும், வைதீகப் பிராமண கோஷ்டியின் தலைவரும், சமூதாய முன்னேற்றத்துக்கு எதிரிடையாயுள்ளவருமான, ஸ்ரீமான். எம், கே ஆச்சாரியாரும், புதிதாக இக்கோஷ்டியில் சேர்க்கப்பட்ட ஸ்ரீமான். டி. குழந்தையும் சில நாட்களுக்குமுன் சௌந்திரிய மஹாலில் நடைபெற்ற மீட்டிங்குக்கு வந்திருந்தனர். ஸ்ரீமான். எம். கே. ஆச்சாரியார் அக்கூட்டத்தில் தலைமை வகித்தார். இவர் முன்னுரை பேசுகையில் ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்கள் சிலரைத் தாக்கிச் சில வார்த்தைகளுரைத்தார். இங்ஙனம் கூறியதற்குக் காரண மென்னவென்றால், காலஞ்சென்ற டாக்டர். டி. எம். நாயர், ஸர். பி. டி. செட்டியார் முதலிய தலைவர்களின் முயற்சியால் ஏற்படுத்தப்பட்ட ஜஸ்டிஸ் கட்சியானது, பிராமணர்களின் செல்வாக்கை ராஜீய விஷயத்திலும், சமூக விஷயத்திலும், மற்றும் இரண்டொரு துறைகளிலும் குறைத்துக் கொண்டு வருகிறதினாலேயாம். பிராமணரல்லாதாரும், ஆதிதிராவிடர்களும் தங்கள் நிலைமையை நன்கறிந்து உஷாராய் நடந்து கொள்ளச் செய்ததும் இக்கக்ஷியேயாகும். காரியம் இப்படியிருக்க, ஸ்ரீமான். ஆச்சாரியாரின் தாக்குதல் ஓர் அதிசயமுமன்று.

## சத்திய மூர்த்தி.

சௌந்திரிய மஹால கூட்டத்தில் பேசியவர்களில் ஸ்ரீமான். சத்திய மூர்த்தி பிரதானமானவர். இவர் தன் பிரசங்கத்தை ஆரம்பிக்கும் போதே, ஜஸ்டிஸ் கட்சியைத் தாக்கத் துவக்கினார். பிறரைத் தாக்கவேண்டுமானால், மரியாதையின்றி அசட்டுத்தனமாகவும், கண்ணியக்குறைவாகவும் பேசுவதில் இவர் சமர்த்தரென்று கூறலாம். இவர் கூறுவதில் மெய்யும், பொய்யும் நிறைந்து இருக்கும். தான் சட்டசபையிலாகட்டும், சர்வகலாசாலைக் கூட்டத்திலாகட்டும், மற்றும் எந்த மேடையிலும் பேசும் போது, பிராமணரல்லாதாரின் முன்னேற்றத்துக்குப் பலத்த சாதனமுள்ள ஜஸ்டிஸ் கட்சிக்கு விரோதமாய்ப் பேசுவதில் மட்டும் பின் வாங்குவதில்லை. இப்பேர்ப்பட்டவரும் ஓர் தேசபக்தராம்!

## ஆச்சாரியாரின் அதிகப்பிரசங்கம்.

அக்கூட்டத்தின் அக்ராசனர், ஸ்ரீமான். ஏ. இராமசாமி முதலியாரை தாக்கிப் பேசினார். ஸ்ரீமான் முதலியார், இங்கிலாந்தில் ஒருவிதமாகவும், இந்தியாவிற்கு வந்ததும் வேறுவிதமாகவும் பேசுகின்றாரென்றும், இவருக்கென்று இங்கிலாந்தில் ஒரு கக்ஷியும், இந்தியாவில் மற்றொரு கக்ஷியும் இருக்கின்றதாவென்றும் சுட்டிக்காட்டி அலக்ஷியமாய்ப் பேசினார். இவர் இவ்வித முறையில் பேசுவதற்குக் காரணமென்னவென்பது முன்னரே கூறப்பட்டிருக்கிறது. ஸ்ரீமான். முதலியார், இங்கிலாந்தில் பேசும் போது, ஜஸ்டிஸ் கட்சியின் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டே, இந்தியா தேசத்தின் விடுதலையைப்பற்றிக் கூறினார். இங்கு வந்ததும், அக்கொள்கைகளைக் கொண்டேதான், பிராமணர்களின் கொடுமைகளைத் தகர்த்து பிராமணரல்லாதரின் விடுதலைக்கென்று பேசிவருகிறார். பிராமணரல்லாத சமூகத்தினுடையவும், தீண்டாதார்களினுடையவும் விடுதலையே தேச விடுதலையென்பது அவருடைய கருத்து. சென்னை மாகாணத்தில் ஆச்சாரியார்கள், சத்திய மூர்த்திகள், ஐயங்கார்கள் செய்யும் அட்டூழியத்தைக் காணும் எந்தப் பிராமணரல்லாதாரின் மனந்தான் நோகாமலிருக்கின்றது. பிராமணரல்லாதாரின் தலைவர்கள், இந்தப்பாழும் பிராமணர்களைப் போல் வேஷதாரிகளல்ல. உண்மைக்கும் யோக்கியதைக்கும் பாடுபடுகின்ற பெரியோர் என்பது இந்த ஆச்சாரியாருக்கும் தெரிந்தேயிருக்குமென்பது எனது நம்பிக்கை. இப்பிராமணர்களின், சொல்லொன்று, செயலொன்று என்பதற்கு ஒரு உதாரணத்தைக் கூறிவிட்டு அடுத்த பாகத்திற்குச் செல்லலாம். ஸ்ரீமான்கள். ஆச்சாரியார், ஏ. ரெங்கசாமி ஐயங்கார் முதலியவர்களின் கோஷ்டியினர், மந்திரிகளும், நிர்வாக சபை மெம்பர்களும, கவர்னர்களும் ஆங்காங்கு திக்விஜயம் செய்து, வேண்டுவன செய்வதைக் கண்டியாமலிருப்பதில்லை. இந்த பெரிய உத்தியோகஸ்தர்கள், பொது ஜனங்களின் பணத்தைப் பிரயாணத்திலேயே பாதி கழித்து விடுகின்றார்கள் எனக்குறை கூறுவதற்கும் இவர்கள் பின் வாங்குவதில்லை. இதற்கெல்லாம் காரணமென்னவென்றால், இந்த உத்தியோகஸ்தர்கள் “சைத்தான்”. கவர்ன்மெண்டில் வேலைபார்க்கிறார்களாம்; ஆனால், அதே கவர்ன்மெண்டில் பூணூல் தரித்துள்ள தங்கள் இனத்தானொருவன் உத்தியோகத்திலிருந்தால், முன் கூறிய ஞானம் போய்விடுகிறது. ஜாதி அபிமானம் வந்து ஒன்று சேர்ந்துவிடச் செய்கிறது. பூணூல் தரித்துள்ள, ஐயங்கார்கள் ஐயர்கள் மற்றும் எந்த பிராமணனை போதிலும் சரியே, அவர் மிதவாதியோ, காங்கிரஸ்வாதியோ, கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தரோ அதைப்பற்றிக் கவலையில்லை, வேண்டியது பூணூல் கோஷ்டிதான். இந்த யோக்கியதையை அநுசரித்தே, தபால் இலாகா அதிகாரி, ஸ்ரீமான். ராய்க்கு நடந்த விருந்தில் இந்த பிராமணர்கள் ஆஜராயிருந்தார்கள் போலும், சபாஷ்! இத்தகைய பெயர் வழிகளையா “சுயராஜ்யக்” கட்சியினரென்று கூறுவது? இவர்களில் இங்ஙனம், யார் எந்த கொள்கையைக் கொண்டிருந்தபோதிலும், பிராமணன் என்றதும் ஒன்று கூடிக்கொள்வதற்கெல்லாம் காரணம், உத்தியோகவேட்டையேயாகும். ஐயங்கார் மகன், ஐயர் மருமகன், ஆச்சாரியார் தம்பி, என்று இப்படியே அவர்கள் உற்றார், உறவினர் யாவரும், சம்பிரமமாக உத்தியோகங்கள் யாவையும் பெற்று சுகமாய் வாழ்ந்திருக்கச் செய்வதை பிராமணரல்லாதார் ஊன்றிக் கவனிக்க வேண்டும்.

## ஜஸ்டிஸ் கட்சியார் செய்துள்ள நன்மைகள்.

ஸ்ரீமான். எம். கே. ஆச்சாரியார், தனது பிரசங்கத்தில் ஜஸ்டிஸ் கட்சி ஜனங்களுக்கு என்ன நன்மையைச் செய்து விட்டது? அதனுடைய திட்டங்களென்ன? எனக் கேட்டார். இவர் இங்ஙனம் கேட்டது, இக்கட்சியின் மீதுள்ள துவேஷத்தினால் ஏற்பட்டதே என்று ஒரு வார்த்தையில் பதில் கூறிவிடலாம். ஆனால், அக்கட்சியானது என்னென்ன நன்மைகளைச் செய்திருக்கின்றது என்பதை மீண்டும் பொது ஜனங்களுக்குக் கூறுவதால் நன்மையுண்டு என எண்ணுகிறேன். இக்கட்சி தோன்றுவதற்கு முன் கவர்ன்மெண்டு ஆபீஸ்களெல்லாம் பிராமண அக்ராகாரமாகவும், பூணூல் கோஷ்டியாகவும், சுக்லாம்பரதரக் கூட்டமாகவும் நிறைந்து இலங்கிக் கொண்டிருந்தது. பெரும்பான்மையாக, டபேதார் வேலையொன்றில் தவிர, மற்ற ஹைகோர்ட்டு ஜட்ஜ், டிஸ்டிரிக் முன்சீப், டெப்டிக் கலெக்டர், தாசில்தார், சிரஸ்தார், குமஸ்தாக்கள் முதலிய சகல உத்தியோகங்களும் இவர்கள் காணியாக ஏகபோகமாகயிருந்தன. ஜஸ்டிஸ் கட்சி தோன்றவே இந்த விஷயத்தில் இவர்களின் செல்வாக்கு குறைய ஆரம்பித்தது. பிராமணரல்லாதாரும், ஆதிதிராவிடர்களும் படிப்படியாக மேலேறி இந்த ஸ்தானங்களைக் கைப்பற்றி வருகின்றனர். பிராமணரல்லாத ஜஸ்டிஸ் கட்சி மந்திரிகளின் ஆக்ஷியில் அநேக ஸ்தலஸ்தாபனங்களில் கட்டாய இலவசக் கல்வி போதிக்கப்பட்டு வருகிறது. பிராமணரல்லாத ஜஸ்டிஸ் கட்சி மந்திரிகளின் காலத்திலேயே இந்து தேவஸ்தான சட்டம் சர்வகலாசாலை சட்டம், தொழிலாளரின் அனுகூலச் சட்டம், இன்னும் பல அரிய நன்மைகள் செய்யப்பட்டிருக்கின்றது. ஜஸ்டில் கட்சிதான் இந்தியாவில் உருவகமானதும், நியாயமானதுமான காரியங்களைச் செய்திருக்கிறது. இதற்கு ஒரு முக்கிய உதாரணம், இந்துமத தேவஸ்தான சட்டமேயாகும். இன்னும் என்னென்ன நன்மைகளை “ஜஸ்டிஸ்” கட்சி செய்திருக்கிறது என்பது ஸ்ரீமான். எம். கே. ஆச்சாரியாருக்குத் தெரியவேண்டுமானால், “ஜஸ்டிஸ்” பத்திரிக்கை ஆரம்பமானது முதற்கொண்டு இதுவரை உள்ள பிரதிகளைப் பார்வையிடும்படி கேட்டுக் கொள்கிறேன். அக்கிரமமாயும், அனாவசியமாகவும் ஓர் உண்மையான கட்சியைப் பற்றி மாறுபாடாகப் பேசுகிற இவர்கள் தானா சுயராஜ்யக்காரர்!

## மரியாதை தெரியாத சத்தியமூர்த்தி.

ஸ்ரீமான். சத்திய மூர்த்தி பேசியதில் சிலவற்றையும் கவனிக்கவேண்டும். இவர் எத்தகைய மனப்பான்மையுடையவர் என்பது இந்த வியாசத்தின் துவக்கத்திலேயே கூறப்பட்டிருக்கிறது. இவர், கனம், பனகால் ராஜா, ஸர். பாத்ரோ ஸ்ரீமான். ஏ. இராமசாமி முதலியார் முதலியவர்களைப்

பற்றிக் கூறும்போது, கொஞ்சமும் மரியாதையின்றி, பனகல், பத்ரோ, ராமசாமி முதலியார் என்று கூறினர். ஒவ்வொருவருக்கும் கௌரவமாக உள்ள ராஜா, ஸர், ஸ்ரீமான். என்பவன போன்றவைகளிருக்க இவர் இப்படிப் பேசியது தான் ஒரு சுயராஜ்யக் கட்சிக் காரர் என்ற எண்ணத்தினலேயா? அல்லது இவருக்குத் தெரிந்த வித்தை இவ்வளவு தானென்பது நமக்கு விளங்கவில்லை. ஸ்ரீமான். சத்தியமூர்த்தி, பல தடவை இங்கிலாந்துக்குப் போயிருக்கிறார். அங்கு "மரியாதை" இன்னதுதானென்பதை இவர் கற்றிருந்திருக்கவேண்டும். இங்கிலாந்தில், மரியாதையாகப் பேசுவது, ஜனங்களுக்குரிய விசேஷ இலக்ஷணம். இந்தியாவிலும் இப்பான்மை உண்டு. ஆனால் இம்மூர்த்தியினிடம் தான் அந்தக் குணம் சூன்யமாய் இருக்கிறது. ஜஸ்டிஸ் கட்சியின் தலைவராகிய, பனகல் ராஜா, இந்த நாட்டிற்கு எத்தகைய உருவகமான வேலைகளைச் செய்திருக்கின்றாரென்பதை பொது ஜனங்கள் அறிவார்கள். ஆனால், சுயராஜ்யக் கட்சி தேசாபிமானியாகிய மரியாதையற்ற சத்திய மூர்த்தியோ ஜஸ்டிஸ் கட்சி தலைவர்களின் பாதரட்சையின் வாரையும் அவிழ்க்க யோக்கியதையுடையவரல்ல. இனியேனும், மூர்த்தியும் அவர் கோஷ்டியினரும் மரியாதை இன்னதென்பதைக் கற்றுக்கொள்ளுவார்களாக. மரியாதை தெரியாதவரும் உண்மையற்றவருமான இவர்கள் தானா சுயராஜ்யக்காரர்!

### அடுத்துவரும் சட்டசபை தேர்தல்.

அடுத்து நடைபெறப்போகும், சட்டசபைத் தேர்தல்களுக்கு சுயராஜ்யக் கட்சியினர் பெரும்பான்மையான ஸ்தானங்களுக்கு பிராமணரல்லாதாரையே நிறுத்தப்போவதாகத் தங்கள் கட்சிக் கூட்டத்தில் பேசியிருக்கின்றதெனக் கூறுகிறார். இவர் கூறுவது வெறும் பித்தலாட்டமேயன்றி வேறல்ல. இம்மாதிரி கூறுவதால் பிராமணரல்லாதார் ஏமாந்து போவார்களென்பது இவருடைய எண்ணமானால், அவருடைய புத்திப்போக்குக்காக நாம் இரங்காதுவேறென்ன செய்வது? பிராமணர்களே, சுயராச்யக்கட்சியின் சார்பாக சகல ஸ்தானங்களுக்கும் நிற்கட்டுமென நான் கூறுகிறேன். அப்போது தான், பொது ஜனங்கள் யார் மீது நம்பிக்கை வைத்திருக்கிறார்களென்பது தெரியவரும். பிராமணர்கள் அடியோடே தோல்வியடைவார்களென்பது அப்போது தெளிவாகும். மற்றும், எங்கெங்கு தங்களுக்கு ஜெயம் கிடைக்காதோ, அங்கங்கே வேண்டாமென்றும், எந்த இடங்களில், சுலபமாக ஜனங்களை ஏமாற்றி விடலாமோ அந்த இடங்களில் தங்கள் கக்ஷியினரை நிறுத்தி வெற்றி கொள்வதும் இவர்கள் வழக்கமென்பது வாசகர்கள் அறிந்ததேயாகும்.

### சுத்தப் பொய்,

ஸ்ரீமான் சத்திய மூர்த்தி எலெக்ஷன் காலத்தில் ஜஸ்டிஸ் கக்ஷியாவது அல்லது அதைச் சேர்ந்த மந்திரிகளாவது தேர்தல் ஸ்தானங்களுக்கு அபேக்ஷகர்களை நிறுத்தவில்லையென்றும், ஜெயமடைந்த பிரதிநிதிகளைத் தங்கள் கக்ஷிக்குள் இழுத்துக் கொண்டார்களென்றும் கூறினர். இது சுத்தப் பொய்யான வார்த்தைகளேயாகும் தேர்தலில் ஜஸ்டிஸ் கட்சியினர் தகுந்த அபேக்ஷகர்களை நிறுத்தி பெரும்பான்மையான வோட்டுகளைக்கொண்டு வெற்றி பெற்றிருக்கின்றனர். உண்மையைத் திரித்துக் கூறுவதினால்தான் இவருக்கு அசத்திய மூர்த்தி எனச் சிலர் பெயர் வைத்து விட்டனர் போலும். மற்றும், மந்திரிகள் சுற்றுப் பிரயாணம் செய்வதிலேயே பொது ஜனங்களின் பணத்தைப் பெருமிதமாகச் செலவழித்துவிட்டனரென்று கூறுகிறார். இதுவும் அசட்டுவார்த்தையென்றே கூறுவோம். மந்திரிகள், தங்கள் இலாகாவைச் சேர்ந்த பல ஜோலிகளைக் கவனிக்கப் பல இடங்களுக்கும் போகாமலிருக்க முடியுமா? அங்ஙனம் போகும்போது, பிரயாணத்திற்கெனப் பணம் செலவழிக்காமலிருக்க முடியுமா? இதெல்லாம் சத்திய மூர்த்திகளுக்குத் தெரியாமல், மந்திரிகள் எலக்ஷன் பிரசாரம் செய்கின்றார்களென்றால், இதுவும் அவர்களுடைய பிதற்றல்களிலொன்று எனத் தள்ளிவிடுதலே உசிதம்.

### சத்திய மூர்த்தியின் வீண் பேச்சு.

இந்து தேவஸ்தான பரிபாலன மசோதாவைப் பற்றி நமது சத்திய மூர்த்தி பேசும்போது பேசிய பேச்சுக்கள் ஒவ்வொன்றும், அழுத்தமாகக் கண்டிக்கத் தக்கதேயாகும். இந்து தேவஸ்தான மசோதா, அடுத்தவரும் தேர்தலுக்கென்று, செய்யப்பட்ட சூழ்ச்சி என்கிறார். ஒருவர் ஒரு காரியத்தைச் செய்தால், அதற்கு அர்த்தம் இப்படிச் செய்கிறார். அவர், வேறொன்றும் உருவகமான வேலை செய்திராவிட்டால், இந்த மந்திரிகளால் பிரயோஜனமே கிடையாதென்கிறார். மந்திரிகள், தாங்கள் தேசத்திற்குச் செய்ய வேண்டிய நன்மைகள் எதுவோ, அவைகளை நன்கு கவனித்து அதற்கென்று, திட்டங்களும், சட்டங்களும், சாதனங்களும் ஏற்படுத்தினால் மூர்த்தி கோஷ்டியார் இவையெல்லாம் எலெக்ஷன் தந்திரமென்கிறார்கள். இவ்விஷயங்கள் யாவையும் ஊன்றிக் கவனிக்கும் போது இவர்களின் பித்தலாட்டம் இன்னதென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல தெரிகின்றது.

### விஷம பிரசாரம்.

ஸ்ரீமான். சத்திய மூர்த்தி, இன்னொரு விஷயத்திலும், பொருந்தாத வார்த்தைகள் சில கூறியிருக்கிறார். அதாவது, "டாக்டர் வரதராஜுலுவும், ஸ்ரீமான் வாசுதேவையாவும் ஜெயிலில் கேழ்வரகு அரைக்கும்படி நேரிட்டது இந்த மந்திரிகளின் காலத்திலேயே" என்கிறார் இவர் சில தினங்களுக்கு முன்பாக, டாக்டர் வரதராஜுலுவை முதற்றடவையாக ப்ராசிகியூஷன் செய்ததற்கு, அட்வோகேட் ஜெனரலாக அப்போதிருந்தவர் காரணமில்லையெனக் கூறினர். சட்டரீதியான விஷயங்களுக்கு, அடவோகேட் ஜெனரல்தான், காரணஸ்தரென்பதை யாவரும் அறிவார்கள். இம்மாதிரி விஷயங்களுக்கும், மந்திரிகளின் ஆட்சிக்கும் எவ்வித தொந்தமுமேயில்லை. அப்படியிருக்க, முன் பின் யோசியாமல், வாய்க்கு வந்தபடி பேசிவிடுவது யோக்கியமாவென்று கேட்கிறேன். எந்த மந்திரியாவது, "டாக்டர் வரதராஜுலுவும், ஸ்ரீமான். வாசுதேவையாவும் தினம் இவ்வளவு தான் கேழ்வரகு அரைக்கவேண்டுமென எங்கேயாவது குறிப்பிட்டிருக்கிறார்களா" வென்பதை ஸ்ரீமான். மூர்த்தி ருசுச் செய்ய முடியுமா? இவையெல்லாம் வேண்டுமென்று ஒருவர் பேரில் கெட்ட எண்ணம் கற்பிப்பதற்கு செய்யும் பொய் பிரசாரமேயாகும்.

### நமது தீர்மானம்.

இந்த ஆச்சாரியார்கள், மூர்த்திகள், ஐயங்கார்கள், போன்ற பூணூல் கோஷ்டியினர் என்ன கூச்சல் செய்யினும் பிராமணரல்லாதாராகிய நாம் அவைகளை லக்ஷியம் செய்யவேண்டியதில்லை. அடுத்த எலெக்ஷனில், நம் கக்ஷிக்கு வெற்றியேற்பட்ட போதிலும், தோல்வி நேரிட்ட போதிலும் சரியே. நாம் யாரும் அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. நமது, கக்ஷியின் நோக்கமெதுவோ, நமது லக்ஷியம் என்னவோ, அவற்றைமட்டும் குறியாகக்கொண்டு உழைப்போம். அப்போது, சமூதாய சீர்திருத்தம் மேலோங்க, நாட்டிறகு விடுதலையும் ஏற்படும்.

---

## திருவிளையாடல்.

---

காங்கிரஸில் ஒத்துழையாமை ஒடுக்கத்துக்குக் காரணமாக நின்றது சுயராச்யக் கட்சி என்பதை அறியாதாரில்லை. அச்சுயராச்யக் கட்சியின் வாழ்வாதல் குலையாதிருக்குமாறு காக்கவேண்டுமென்று நாம் பன்முறை அறைகூவி வருவது நேயர்கட்கு நினைவிருக்கும். சுயராச்யக் கட்சியின் கொள்கைவழி அக்கட்சிக்காரர் நடக்கக் கடமைப்பட்டிருக்கிறார். அக்கட்சியை ஒத்துழையாமைக்கெனச் சிலரும் ஒத்துழைப்புக்கென்ச் சிலருங் கொண்டிருக்கிறார். இந்நோக்குடையார் அக்கட்சியில் சேர்ந்திருப்பதால் அக்கட்சிக்கு அழிவு அணித்தேயிருக்கிறதென்றுங் கூறலாம். சட்டசபை நுழைவு என்றதும் பல ஒத்துழைப்பாளர் சுயராச்யக் கட்சியில் சேர்ந்தனர். சட்டசபையில் ஒத்துழையாமை என்பதைப்பற்றி அவர்க்குக் கவலையில்லை. "உள்ளே நுழைந்தால் பின்னே பார்த்துக் கொள்ளலாம்" என்பது அந்நண்பர்கள் சித்தாந்தம். உள் நுழைந்த அண்ணல்கள் பற்பல திருவிளையாடல் புரிந்து வருகிறார்கள்.

முதலாவது சுயராச்யக் கட்சிக்காரர் புரிந்த திருவிளையாடல் அரசாங்கத் தனிக் கமிட்டிகளில் அங்கம்பெற இசைந்தது. இரண்டாவது திருவிளையாடல் சட்டசபைகளில் அக்கிராசனர் பதவி விழைந்தது. மூன்றாவது அரசாங்க நிர்வாகத்தில் அகம் பெற்ற திருவிளையாடல். முதலிரண்டு திருவிளையாடல்களுக்குக் கட்சியே அரங்காகி இடந்தந்தமையால் கண்டனங்கள் எழவில்லை. மூன்றாவது திருவிளையாடல் அந்தரங்கத்தில் ஒருவரால் நடத்தப்பட்டமையால் அது கண்டனத்துக் குட்பட்டிருக்கிறது.

சுயராஜ்யக் கட்சி வீறுகொண்டு நின்ற இடம் மத்திய மாகாணம். இப்பொழுது அது தான் சருகொள்ள முயன்று வருகிறது. சுயராச்யக் கட்சியில் சேர்ந்த ஸ்ரீமான். தாம்பே என்பவர் அக்கட்சித் துணையால் தேர்தலில் வெற்றி பெற்றுச் சட்டசபை நுழைந்து, அச்சபைத் தலைமைப் பதவியும் பெற்று, இப்பொழுது எவரும் அறியாமல் அதிகாரவர்க்க நிர்வாக சபையில் அங்கம் பெற்றுவிட்டார், அவர் சுயராச்யக் கட்சியில் சேர்ந்த நோக்கத்தை நிறைவேற்றிக் கொண்டார். அது கண்ட சிலர் மந்திரிப் பதவி ஏன் ஏற்றுக் கொள்ளலாகாது என்று வாதாடும் திருவிளையாடல் புரிந்து வருகிறார்.

தாம்பே அதிகாரவர்க்கக் கூட்டத்தில் சேர்ந்தது கண்டு சுயராஜ்யக்கட்சித் தலைவர்களுக்குள் நடக்கும் போராட்டம் பெருந்திரு விளையாடலாக விருக்கிறது. சுயராஜ்யக் கட்சித்தலைவரும் ஸ்கீன் கமிட்டியில் அங்கம் பெற்றவருமாகிய பண்டித மோதிலால் நேரு "தாம்பே துரோகஞ் செய்து விட்டார்" என்று வீராட்டகாசஞ் செய்கிறார். மற்றொரு மஹாராஷ்டிர சுயராஜ்யக் கட்சித் தலைவராகிய ஸ்ரீமான், கெல்கார் ஸ்ரீமான். தாம்பேவுக்கு வாழ்த்துக் கூறி "நேரு ஸ்கீன் கமிட்டியில் அங்கம் பெற்றதற்கும் தாம்பே நிர்வாக சபையில் அங்கத்தவரானதற்கும் என்ன வேற்றுமை" என்று கேட்கிறார். பம்பாய் சுயராஜ்யக்கட்சித் தலைவரும், இந்திய சட்டசபையில் தலைவர் பதவி பெற்றவருமாகிய ஸ்ரீமான். படேல் "தாம்பே செய்தது தவறு. எனது பதவிக்கும் அவர் பதவிக்கும் வேற்றுமையுண்டு" என்று புலம்புகிறார். மற்றொரு சுயராச்யக்கட்சிக்காரராகிய ஸ்ரீமான் ஜெயகர் "படேல் செயலுக்கும தாம்பே செயலுக்கும் என்ன வேற்றுமை? படேலுக்குப் பொது ஜனங்கள் ஊர்வலம் நடத்துகிறார்கள்; வாழ்த்துக் கூறுகிறார்கள் பொது ஜனங்கள் மனம் ஒத்துழைப்பிலிறங்கி விட்டது. இனி எல்லாஞ்செய்யலாம்" என்று முழங்குகிறார். இவரை மற்றவர் கண்டிக்கிறார். தாம்பே நடத்தையை மறுத்துரைக்க சில விடங்களில் கண்டனக் கூட்டங்களுங் கூடின. அக்கூட்டங்களில் கோழித்திருடிகளும் கூடக் குலாவியதை நாம் உணர்வோம். சுயராஜ்யக்கட்சி அரங்கத்தில் பற்பல திருவிளையாடல்கள் நிகழ்ந்து வருகின்றன. நாளடைவில் சுயராஜ்யக் கட்சியின் நிலை என்னாகுமென்று சொல்லவும் வேண்டுமா? அக்கட்சி உத்தியோகம் என்னுங்கட்சியாகவும், உத்தியோகம் வேண்டாம் என்னுங்கட்சியாகவும் பிரிந்து இரியும். சுயராச்யக் கட்சியின் திருவிளையாடல்களை இன்னும் பார்த்து வருவோம்.

(நவசக்தி)

---

## படித்த வகுப்பினரும் சுவாமி விவேகானந்தரும்.

---

காந்தியடிகளின் தெய்விக இயக்கத்தைக் கொலைசெய்தவர் படித்த வகுப்பினரே என்னுங் கருத்தைப் பலமுறையும் நாம் வலியுறுத்தியிருக்கிறோம். படித்த வகுப்பினரில் மிகப் பெரும்பான்மையோர் தமது இயக்கத்தை ஏற்றுக்கொள்ளச் செய்ய முடியவில்லையென்று அடிகளும் பலமுறை கூறியுள்ளார். படித்த வகுப்பினர் விலகி நிற்பதனால் தான் கதரியக்கமும் எதிர்பார்க்கக் கூடியவளவு பெருகவில்லையென்று சென்ற வாரத்து "எங் இந்தியா"வில் மகாத்மா கூறுகிறார். ஆனால் மகாத்மாவுக்கு முன்னமே மற்றொரு மகானும் இவ்வாறு படித்த வகுப்பினர் விஷயத்தில் ஏமாற்ற மடைந்திருப்பதாகத் தெரியவருகிறது. சுவாமி விவேகானந்தரை அறியாத இந்தியர் எவரும் இருக்கமாட்டார். அப்பெரியார் ஒரு முறை தம்பிடம் பேசிக்கொண்டிருந்தபோது அடியிற்கண்டவாறு கூறியதாக ஸ்ரீமான். செட்லூர் என்பவர் பத்திரிகைகளுக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவிக்கிறார்:—

"தற்காலக் கல்வி உங்களைக் கோழைகளாகச் செய்து விட்டது. என்னுடைய வாழ்நாளில் பத்து ஆண்டுகளைப் படித்த வகுப்பினரிடையே உழைத்து வீணாக்கி விட்டேன். 'மூளை' மனிதர்களுக்காகச் செலவழித்த காலத்தில் பாதி நேரத்தை உடல் உழைப்பாளிகளான பாமர ஜனங்களுக்காகச் செலவிட்டிருந்தால் இந்நாட்டின் நிலைமை எத்துணையோ மாறுதலடைந்திருக்கும். உங்களை நம்பிப்பயனில்லையென்று கைவிட்டு விட்டேன். என் வாழ்நாளில் பாக்கியிருக்கும் காலத்தைப் பாமரர்களின் தொண்டுக்கே அர்ப்பணம் செய்யத் தீர்மானித்திருக்கிறேன்."

நமது மகாத்மாவும் இத்தகைய, முடிவுக்குத்தான் வந்துள்ளார் என்று நாம் சொல்லவேண்டுவதில்லை.

(நவசக்தி.)

---

## வீண் பழி.

---

திருச்சி இந்து சபை அமைச்சர் திரு. கி. ஆ. பெ. விசுவநாத பிள்ளை கீழ்கண்டவாறு எழுதுகிறார்:—

17-10-25 ல் வெளிவந்த "சைபுல் இஸ்லாம்" பத்திரிகையொன்று நமது பார்வைக்கு வரப்பெற்றோம். அதில் திருச்சியில் 11-10-25-ல் கூடிய இந்து சபையைத் தாக்கி எழுதியிருந்தது. இது இந்துக்களின் மனதைப் புண்படுத்தக் கூடியதேயாகும்.

இந்து சபையில் முனிசிபல் கௌன்சிலர் ஸ்ரீமான். J S. நரசிம்மலு நாயுடு அவர்கள் 'முஸ்லீம்களில் இப்பொழுது மஜ்லிசுல் உலமா ஏற்படுத்தி முஸ்லீம் அநாதப்பிள்ளைகளுக்கு கல்வியும், உணவும் அளித்து காப்பாற்றி வருகிறார்கள். அதுபோல நாமும் இந்த சமயத்திலும் பிச்சையெடுத்தும், தெருக்களில் சுற்றித் திரிந்தும், பட்டினிகிடந்தும், அவதிப்படுகிற அனாதைப்பிள்ளைகளுக்கு ஏன் கல்வியும் உணவும் அளித்து காப்பாற்றக் கூடாது? என்று கூறினார்கள்.

இதை ஒரு முஸ்லீம் நண்பர் "இந்துக்களின் அநாதைப்பிள்ளைகளை முஸ்லீம்கள் சிலோனுக்கு ஆள் சேர்ப்பதுபோல எடுத்துக்கொண்டுபோய் முஸ்லீம் மதத்திற்சேர்த்துக் கொள்ளுகிறார்கள்" என்று நரசிம்மலு நாயுடு அவர்கள் கூறியதாக எக்காரணத்தினலோ எழுதி அவ்வியாசம் 17-10-25-ல் சைபுல் இஸ்லாமில் வெளிவந்திருக்கிறது. போதாக்குறைக்கு இவ்வீண பொய்க்கூற்றை நம்பி, அப்பத்திரிகையின் ஆசிரியர் அந்த பத்திரிகையில் 2 பத்தி கண்டித்தெழுதியிருக்கிறார்.

நடந்தது ஒன்றும் எழுதுவது மற்றொன்றுமாகிய நிருபர்களை நம்பி இத்தகைய பொய்க் கூற்றையே மெய்யெனக் கருதி உண்மையை யுணராமல் இந்து சமூகத்தினரின் மனதைப் புண்படுத்துவதனால் எத்தகைய நன்மை யுண்டாகுமென்பதை நம் முஸ்லீம் சகோதரர்களையே யோசிக்க வேண்டுகிறோம். வடநாட்டில் இத்தகைய நிருபங்களை பிரசுரிப்பதினலேயே இந்து முஸ்லீம் கலகங்கள் அடிக்கடி நடைபெறுகிறது. தென்னாட்டிலுள்ள பத்திரிகைகளும் இத்துறையில் இறங்குவதாயின் அது நம் நாட்டின் நன்மைக்காகவா? வென வினவுகிறோம்.

திருச்சி இந்து சபை பலவேறுவகைப்பட்ட இந்துக்களுக்குள் ஒற்றுமையை உண்டாக்க ஏற்பட்டதே ஒழிய இந்து முஸ்லீம் வேற்றுமையை உண்டாக்குவதற்கல்ல. மஜ்லிசுல் உலமாவின்மீது இந்துக்களுக்கு பூரண நம்பிக்கை உண்டு, என்பதை மீண்டும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

---

## ஈரோடு மண்டிக்கடையும், பகிரங்கத் திருட்டும்.

ஈரோடு டவுனில் சுற்றும் அனாதைப் பையன்கள் பகலில் வீதிகளில் சுற்றி எச்சிலைகளைப் பொறுக்கித் தின்பதும், ராத்திரி காலங்களில் பெரிய பெரிய கட்டிடங்களின் மேலேறி சாமர்த்தியமாகத் திருடுவதும், திருடிய சாக்குகளை விற்பதுமாகவும் இருந்தார்கள். இதை சென்ற 24—10—25-ல் பில் கண்டு பிடித்துத் திருடியவனைப் போலீஸ் ஸ்டேஷனில் அதிகாரிகளிடம் ஒப்புவிக்க, ஷை பையன் திருடியது வாஸ்தவம் என்றாலும் இம்மாதிரி எத்தனையோ கட்டடங்களில் நெடுநாளாகத் திருடிவருவதாகவும், ஒப்புக்கொண்டான். திருடிய சாக்குகளை வாங்குபவர்களையும் பிடிக்கப்பட்டு சாக்குடன் கொண்டுவரப்பட்டது. திருடிய பையனை அன்றைய தினமே போலீசார் விட்டு விட்டதாகத் தெரிகிறது. இதனால் அடுத்தநாள் 25-உயில் வேறு இடத்தில் 14 குரோஸ் நெருப்புப் பெட்டியும் திருட்டுப் போயிருக்கிறது. இதைப்பற்றி மேலதிகாரிகள் கவனிக்கவேண்டும். கவனியாமல் விட்டுவிட்டால் அதிகமாகத் திருட்டு நடக்கக்கூடுமென்று நினைக்கிறேன். என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

---

## இராஜபாளையம் நூல் நூற்போர் சங்கம்.


---

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் தீர்மானத்திற்கிணங்கி இந்நகரில் சென்றமாதம் ஸ்ரீமான். பி. எஸ். சின்ன வெங்கிடராஜா அவர்கள் கிரகத்தில் சங்கம் கூடி ஸ்தாபிக்கப்பட்டு ஸ்ரீமான்கள். P. S. சின்ன வெங்கிடராஜா, வெங்கிடபதிராஜா சே. கோபாலய்யங்கார், பூ, கு. சுப்பராஜா கொ. அ பெத்துராஜா இவர்களை ஷை சங்கத்தின் நிர்வாக மெம்பர்களாக தெரிந்தெடுக்கப்பட்டது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

## இலங்கை நாட்டுக்கு நமது ஏஜண்ட்.

இலங்கை நாட்டுக்கு நமது "குடி அரசு"ப் பத்திரிக்கையின் ஏஜண்டாக இருக்க கொழும்பு செட்டித்தெரு, 72-ம் நெம்பர் கட்டடத்திலுள்ள சுத்தக் கத்தர் ஜவுளி நிலையம், ஸ்ரீமான். பெ. பெரி. சுப்பிரமணியம் செட்டியாரவர்களைக் கேட்டுக்கொண்டதின்மேல் அவரும் சம்மதித்ததால் அவரை நியமித்திருக்கிறோம். நமது பத்திரிக்கைக்குச் சந்தாதாரராகச் சேர விரும்புகிறவர்கள் ஷையாரிடம் சந்தா செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ளலாம்.

மானேஜர்



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவற்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.

# குடி அரசு.

குரோதன-ஹு ஐப்பசி-மீ கஞ-உ

## நமது பத்திரிக்கை.

நமது "குடி அரசுப்" பத்திரிக்கை ஆரம்பித்து ஆறுமாதங்களாகின்றது. அது முக்கியமாய் நமது நாட்டுக்கு சுயராஜ்யமாகிய மகாத்மாவின் நிர்மாண திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வரவும் தமிழர்களாகிய தீண்டாதார் முதலியோருடைய முன்னேற்றத்துக்கென்று உழைக்கவுமே ஏற்படுத்தப்பட்டது. இத்தொண்டில் "குடி அரசு" சிறிதுங் கள்ளங் கபடமின்றி யாருடைய விருப்பு வெறுப்பையும் பொருட்படுத்தாது தனது ஆத்மாவையே படம் பிடித்தாற்போல் தைரியமாய் வெளிப்படுத்திக் கொண்டு செய்து வந்திருக்கின்றது— வரவும் உத்தேசித்திருக்கிறது. "குடி அரசு" குறிப்பிட்ட கருத்தைக் கொண்ட பிரசாரப் பத்திரிகையே யல்லாமல் வெறும் வர்த்தமானப் பத்திரிக்கை அல்லவாதலால், வியாபார முறையையோ பொருள் சம்பாதிப்பதையோ தனது சுயவாழ்வுக்கு ஓர் தொழிலாகக் கருதியோ சுயநலத்திற்காக கீர்த்தி பெற வேண்டுமென்பதையோ ஆதாரமாய்க் கொள்ளாமலும், வாசகர்களுக்கு போலி ஊக்கமும் பொய்யான உற்சாகமும் உண்டாகும்படியாக வீணாய் கண்ட கண்ட விஷயங்களை யெல்லாம் கூலிக்கு எழுதச் செய்வித்தும், குறிப்பிட்ட அபிப்பிராயமில்லாமல் சமயத்திற்கேற்றாற்போல் ஜனங்களின் மனதைக் கலங்கச் செய்து வருவதுமான பொறுப்பில்லாத ஓர் வேடிக்கைப் பத்திரிக்கையுமன்று. பிரதி வாரமும் "குடி அரசு" தனது ஆத்மாவை வெளிப்படுத்தும்போது கண்ணீர் சொட்டாமலிருக்க முடிவதேயில்லை. இதன் பலனாக உயர்ந்தோரென்று சொல்லிக் கொள்ளுவோராகிய பிராமணர் முதலிய சமூகத்தாருக்கும், ராஜீயத்தலைவர்களென்று சொல்லிக் கொள்ளுவோர்களாகிய பல ராஜதந்திரிகளுக்கும், விரோதியாகவும் அவர்களுடைய சூழ்ச்சிப் பிரசாரங்களுக்கு நமது "குடி அரசு" ஆளாக வேண்டியதாகவும் ஏற்பட்டிருக்கிறது. இவ்வித நிலையில் "குடி அரசு" சீக்கிரத்தில் பாமர ஜனங்களின் செல்வாக்கைப் போதிய அளவு பெற முடியாமலிருப்பது ஓர் ஆச்சரியமல்ல.

உண்மையில் "குடி அரசு" க்கு எந்த பிராமணரிடத்திலும் குரோதமோ வெறுப்போ கிடையாதென்பதை உறுதியாகச் சொல்லுவோம். ஆனால் பிராமணன் உயர்ந்தவனென எண்ணிக் கொண்டிருப்பதிலும், மற்றவர்கள் தீண்டாதவர்கள், பார்க்கக் கூடாதவர்கள் "இழிவான" மிருக உரிமைக்கும் பாத்திரமில்லாதவர்கள் என்று எண்ணிக் கொண்டிருக்கும் எண்ணத்தினிடத்திலும், தங்கள் வகுப்பார்தான் முன்னணியிலிருக்க வேண்டும், மேன்மையுடன் பிழைக்க வேண்டும், மற்றவர்கள் என்றென்றைக்கும் தங்களுக்கு அடிமையாகவே யிருக்கவேண்டும் என்று எண்ணிக் கொண்டும், அதற்காக மற்றவர்களை உபயோகித்துக் கொண்டும் செய்யும் கொடுமையான சூழ்ச்சிகளிடத்திலுந்தான், "குடி அரசு"க்கு வெறுப்பு இருப்பதுடன், அதை அடியோடே களைந்தெறிய வேண்டுமென்று ஆவல் கொண்டு உழைத்து வருகிறது.

பிராமணர்கள் என்று சொல்லிக் கொள்வோரிடத்தில் "குடி அரசி"ன் தற்காலப் பத்திராதிபர் எவ்வளவோ அன்புடனும், பக்தியுடனும், நட்புடனும் வெகு காலமாக நடந்து கொண்டு வந்திருக்கிறார். அநேக பிராமணர்களுடைய அன்புக்கும் பாத்திரமாயிருந்திருக்கிறார். இன்னும் இருந்து வருகிறார். தேசிய வேலையிலும், பல தேசிய பிராமணர்களுடன் ஒன்றுபடக் கலந்தே ஒத்துழைத்தும் வந்திருக்கிறார். உதாரணமாக, ஒத்துழையாமைக்கு முன்பு சட்ட சபைப் பிரவேசங்களுக்கு தனது குடும்ப சகோதரர்கள் போன்ற ஆப்த நண்பர்களான ஸ்ரீமான்கள். கோவை. எம். சம்மந்த முதலியார், டி.ஏ.ராமலிங்கம் செட்டியார், எம். வேணுகோபால் பிள்ளை முதலியோர்களுக்கு விரோதமாகவும், அதற்குமுன் அதிகப் பழக்கமில்லாத ஸ்ரீமான். பி. வி. நரசிம்மய்யருக்கு "தீவிர தேசிய வாதி" என்கிற ஒரு காரணத்திற்காகவே அவருக்கு சட்ட சபை அங்கத்தினர் பதவி கிடைக்கவேண்டிய வேலை செய்திருக்கிறார். இதில் ஒரு விஷயத்தை மாத்திரம் இங்கு சொல்வது குற்றமாகாதென்று நினைக்கிறோம். அதாவது, ஸ்ரீமான். வேணுகோபால் பிள்ளைக்காக ஸ்ரீமான். நரசிம்மய்யரை தம் அபேக்ஷகர் ஸ்தானத்தை வாபீஸ் வாங்கிக் கொள்ளும்படி ஒரு சட்டசபைத் தேர்தலில் கேட்கப்பட்டபோது ஸ்ரீமான். பி. வி. நரசிம்மய்யர் ஸ்ரீமான். வேணுகோபால் பிள்ளை தாம் காங்கிரஸ் வாதி யென்றும், ஹோம்ரூல் கக்ஷியைச் சேர்ந்தவரென்றும் வெளிப்படையாகப் பத்திரிகைகளுக்கு எழுதினால் தாம் அபேக்ஷகர் ஸ்தானத்திலிருந்து விலகிக்கொள்வதாகப் பகிரங்கமாகச் சொன்னார். அந்தப்படியே ஸ்ரீமான். வேணுகோபால் பிள்ளையும், தாம் காங்கிரஸ் வாதியென்றும், ஹோம்ரூல் கக்ஷியைச் சேர்ந்தவரென்றும் பத்திரிக்கைகளுக்கு எழுதி விட்டார். பேச்சுப்படி, ஸ்ரீமான். நரசிம்மய்யர் பின்வாங்கிக் கொள்ளவேண்டுமென்று சொன்ன காலத்தில் முடியாதென்று சொல்லிவிட்டார். இது விஷயங்களைப் பத்திரிகைகளுக்கு எழுதின காலத்தில் "நியூ இந்தியா" "ஹிந்து" "சுதேச மித்திரன்" இம்மூன்றும் பிரசுரிக்கவேயில்லை. இம்மாதிரி நாணயத் தவறுதல் ஏற்பட்ட சந்தர்ப்பத்திலுங் கூட ஸ்ரீமான். நாயக்கர், தம்முடைய ஆப்த நண்பராயிருந்து கொண்டு வந்த ஸ்ரீமான். வேணுகோபால் பிள்ளையவர்களுக்கு விரோதமாகவும், ஸ்ரீமான். நரசிம்மய்யருக்கு அநுகூலமாகவுமிருந்து தம்முடைய வோட்டுகளையும், தம் நண்பர்களுடைய வோட்டுகளையும், ஸ்ரீமான். நரசிம்மய்யருக்கே கொடுத்து அவரை சட்டசபை மெம்பராக இருப்பதற்கும் உதவி செய்தார்.

அல்லாமலும், ஒத்துழையாமை காலத்திலும், தேசிய பிராமணர்களுடன் ஒன்றுபடக் கலந்தே, பரிசுத்தமாய் சில பிராமணர்களைப் பின் பற்றியும், அவர்களைத் தலைவர்களாக்கியும் அவர்களைத் தலைவர்களாகக் கொண்டும், உழைத்து வந்திருக்கிறார். இவையெல்லாம் தேசத்தையும் தேச க்ஷேமத்தையும் முன்னிட்டேயல்லாமல், வேறெவ்வித சுயநலத்திற்காகவும் அல்லவென்பதை ஸ்ரீமான். நாயக்கரின் எதிரிகளுங்கூட அறிவார்கள். இப்படியிருக்க, இப்பொழுது, திடீரென்று, சில தேசிய வாதிகளென்போரிடமும் முக்கியமாய் பிராமண சமூகத்தில் பலரிடமும் அருவருப்புத் தோன்றக் காரணமென்ன வென்பதை வாசகர்கள் அறிய ஆவல் கொள்ளுவது சுபாவமேயாகும். நமக்கு இதுவரை எற்பட்ட அனுபவத்தில், பிராமண தேசிய வாதிகளென்போரில் பெரும்பாலோர், தங்கள் சுயநலத்திற்கும், தங்கள் வகுப்பு முன்னேற்றத்திற்கும், பிராமணரல்லாத மற்ற எல்லா சமூகத்துக்கும் துரோகம் செய்வதற்குமே உழைத்து வந்திருக்கின்றார்களென்றும்—ஸ்ரீமான். நாயக்கர் போன்றாரை உபயோகப் படுத்திக் கொண்டு வந்திருக்கின்றார்களென்றும், நினைக்கும்படியாகவே ஏற்பட்டுப் போய்விட்டது. பிராமணர்களின் தியாகமென்று சொல்லப்படுவதும் பிராமணரல்லாதாரின் கெடுதிக்காகவே செய்யப்படுவதாய்க்

காணப்படுகிறது. இந்நிலையில் தேசத்தின் பெரிய சமூகத்தாரான, பிராமணரல்லாதாரைப் பலி கொடுத்து பிராமணர்களுக்கு நல்ல பிள்ளைகளாய் நடக்க வேண்டும் என்கிற எண்ணம் கொஞ்சமும் தோன்றமாட்டேனென்கிறது. அல்லாமல், இவற்றைப் பற்றிய கவலை எடுத்துக்கொள்ளாமல் எப்படியோ போகட்டும் என விட்டு விடுவதற்கும் மனம் ஒருப்படுவதில்லை. என்றைக்கிருந்தாலும் இரு சமூகத்தினரும் ஒன்றுபட்டுத்தானாக வேண்டும். அங்ஙனம் ஒன்றுபடுவதற்கு அவரவர்களுடைய குற்றங் குறைகளை எடுத்துச் சொல்லப் பயந்து கொண்டு மேற்பூச்சுக்கு மாத்திரம் பிராமணர்களிடம் அன்பர்களாய் நடந்து கொள்ளுவதில் இருசமூகத்தாருக்கும் ஒரு பிரயோஜனமும் ஏற்படாது எனக் கருதியே, யாருடைய நிஷ்டூரம் ஏற்பட்டாலும் அதைப்பற்றிக் கவலையில்லாமல் உண்மையை எடுத்துக் கூறி குற்றங்களைக் கிறி ஆற்றி திருத்துப்பாடடையச் செய்து இரு சமூகமும் உண்மையான சகோதர அன்பில் கட்டுப்பட்டு நமது நாடு உண்மையான விடுதலை பெறவே, உழைத்து வரப்படுகிறது. இதை ஆரம்பத்திலேயே "குடி அரசின்" முதலாவது இதழ் தலையங்கத்தில் "மக்களுக்குள் தன் மதிப்பும், சமத்வமும், சகோதரத்வமும் ஓங்கி வளரல்வேண்டும், மக்கள் அனைவரும் அன்பின் மயமாதல் வேண்டும், உயர்வு, தாழ்வு, என்ற உணர்ச்சியே நமது நாட்டில் வளர்ந்து வரும் சாதிச்சண்டையென்னும் நெருப்புக்கு நெய்யாக இருப்பதால் இவ்வுணர்ச்சி ஒழிந்து அனைத்துயிரும் ஒன்றென்றெண்ணும் உண்மையறிவு மக்களிடம் வளர்தல் வேண்டும், சமயச்சண்டைகள் ஒழியவேண்டும், ஆனதுபற்றியே, "நகுதற்பொருட்டன்று நட்டல் மிகுதிக் கண்மேற் சென்றிடித்தற் பொருட்டு," எனும் தெய்வப் புலமைத் திருவள்ளுவரின் வாக்கைக் கடைபிடித்து, நண்பரேயாயினுமாகுக, அவர் தம் சொல்லும், செயலும் தேசவிடுதலைக்குக் கேடு சூழ்வதாயின் அஞ்சாது கண்டித்தொதுக்கப்படும்" என நமது அபிப்பிராயத்தைத் தீர்க்கமாகக் குறிப்பிட்டிருக்கிறோம்.

இந்நிலையில், நமது "குடி அரசு" பாமர ஜனங்களின் ஆதரவைப் பூரணமாகப் பெறுவது சுலபத்தில் எதிர்பார்க்கக் கூடிய காரியமல்ல. உதாரணமாக, "குடி அரசு" ஏற்பட்டு ஆறுமாத காலமாகியும் இதுவரை ஆயிரத்துச் சில்லறை சந்தாதாரர்களே சேர்ந்திருக்கிறார்கள். இது நஷ்டத்தில் தான் நடைபெற்று வருகின்றதெனச் சொல்ல வருந்துகிறோம். அதனைப் படிக்க வேண்டிய அளவு ஜனங்கள் படிக்கவில்லை யென்பதே நமது அபிப்பிராயம். பெரும்பாலும், பிராமணர், செல்வவந்தர் முதலாளிகள், வைதீகர் முதலியோருடைய குற்றங்களை எடுத்துச் சொல்லிவருவதால் அவர்கள் நமது பத்திரிக்கையை ஆதரிப்பார்களென்று எதிர்பார்ப்பது பைத்தியகாரத்தனமாகவே முடியும். ஆதலால், நமது பத்திரிக்கையை ஆதரிக்க வேண்டியது பிராமணரல்லாதார், ஏழைகள், தொழிலாளிகள், தீண்டாதாரென்னப்படுவோர் முதலிய ஒடுக்கப்பட்ட சமூகத்தாருக்கு ஏற்பட்ட முக்கிய கடனாகும். அந்தப்படி இக்கூட்டத்தார் நமது "குடி அரசை" ஆதரிக்க வில்லையானால், "குடி அரசு" தானாகவே மறைந்து போகவேண்டியதுதான் அதனுடைய கடமையே யல்லாமல், முன் சொன்னது போல் சுயநல முதலியவைகளுக்கென்று இப்பத்திரிக்கையை நடத்துவதில் பிரயோஜனமில்லை. ஏனெனில் "குடி அரசா"னது தன்னுழைப்பினாலும், தனது தியாகத்தினாலும் மக்கள், சிறப்பாய் பிராமணரல்லாதார் தீண்டாதார் முதலியோர் விடுதலை பெற்று சுயமதிப்புடன் வாழ்ந்து தேசம் உண்மையான சுயராஜ்யமடையவேண்டுமென்றும், சகலரும் சமமாய் வாழவேண்டுமானால், -தாழ்த்தப்பட்டவர்களெல்லாம் சமநிலைக்கு வரவேண்டுமானால்-வகுப்பு வாரிப் பிரதிநிதித்வம் இன்றியமையாததெனக் கருதி அதை யெல்லா வகுப்பாரும் அடையவேணடுமென, எதிர்பார்க்கிறதேயொழிய பொது மக்கள் வாழ்வால் "குடி அரசு" வாழவேண்டுமென்று அது கருதவேயில்லை. ஆதலால் "குடி அரசி"ன் வாழ்வைக் கோருகிற ஒவ்வொருவரும், தங்களாலியன்றளவு புதிய சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுத்தும், மற்றும் தங்களால் கூடிய உதவி செய்தும் இதனை ஆதரிக்க வேண்டுகிறோம்.

---

## சுதேசமித்திரனின் ஜாதிப் புத்தி.

சென்ற வாரம் இத்தலையங்கத்தின் கீழ் "சுதேசமித்திரன்" என்னும் பிராமணப் பத்திரிக்கை, பிராமணரல்லாதாருக்கும், முக்கியமாய் பிராமணரல்லாத தேசத் தொண்டர்களுக்கும், விரோதமாய் வேண்டுமென்றே செய்து வரும் சூழ்ச்சிகளைப் பற்றி எழுதி, மற்றும் மறுமுறையென்று எழுதியிருந்தோம். அவற்றில் முக்கியமாக ஸ்ரீமான். ஈ. வெ. இராமசாமி நாயக்கரைப் பற்றி தன்னாலும் தான் ஆட்கொண்டவர்களாலும் பொது ஜனங்களுக்கு எவ்வளவு கெட்ட அபிப்ராயத்தைக் கற்பிக்க வேண்டுமோ, அவ்வளவையும் செய்து பார்ப்பதென்றே முடிவு கட்டிக்கொண்டிருக்கிறது. ஸ்ரீமான். நாயக்கர் எந்த ஊருக்குப் போயிருந்தாலும், என்ன பேசினாலும் அவற்றைத் திரித்துப் பொது ஜனங்களுக்குத் தப்பபிப்ராயப்படும்படி கற்பனை செய்து பத்திரிக்கைகளிலெழுதுவதும் அவற்றிற் கேற்றாற்போலவே சில ஈனஜாதி நிருபர்களை அங்கங்கே வைத்துக் கொள்ளுவதும், அவர்கள் பேரால் ஸ்ரீமான் நாயக்கர் சுயராஜ்யம் வேண்டாமென்கிறார், ஜஸ்டிஸ் கட்சியில் சேர்ந்து விட்டார், அதிகாரவர்க்கத்தோடு கலந்து விட்டார், காங்கிரஸ் கொள்கைக்கு விரோதமாயிருக்கிறார் என்று இவ்வாறாக அப்பத்திரிக்கை எழுதி வருகிறது. உதாரணமாக, பொள்ளாச்சி, மதராஸ், அநுப்பபாளையம், தஞ்சை, மாயவரம் இந்த இடங்களில் ஸ்ரீமான். நாயக்கர் பேசிய பேச்சைப் பற்றி சுதேசமித்திரன் பத்திரிக்கை தாறுமாறாகவும் பிரசுரம் செய்து, அதையனுசரித்துப் பல குட்டித் தலையங்கங்களும் எழுதி வந்திருக்கிறது. போதாக் குறைக்கு தன் இஷ்டம்போல் பலவற்றை எழுதிக் கொண்டு சில பிராமணரல்லாதாரிடம் கையெழுத்துப்பெற்று, அவர்கள் பேரால் பிரசுரம் செய்து கொண்டும் வருகிறது. இப்பிராமணப் பத்திரிகைகள், பிராமணரல்லாதாருக்கு விரோதமாய் இங்ஙனம் செய்யும் அயோக்கிய பிரசாரத்தையும், பிராமணர்கள் சிலர் செய்யும் முறையற்ற சூழ்ச்சிப் பிரசாரங்களையும் நாம் கண்டித்து எழுதும் போது கடினபதங்களைப் பிரயோகிப்பதாய் சிலர் கூறுகின்றனர். மனிதர்களுடைய யோக்கியதைக்குத் தகுந்த பதம் உபயோகப்படுத்தவேண்டுமேயென்பதை அவர்கள் மறந்து விடுகிறார்கள். மான வெட்கமுள்ள ஜனங்களுக்கு உபயோகப்படுத்த வேண்டிய பதம் வேறு, அஃது இல்லாதவர்களுக்கு உபயோகப்படுத்தவேண்டிய பதம் வேறு. ஒவ்வொரு பதத்தையும் நாம் மனிதர்களுக்குத் தக்கபடி தான் அளந்து உபயோகிக்கிறோம். நாம் உபயோகப்படுத்துகிற பதங்கள் கடினபதங்களென்று சொல்லப்படுவது கூட, சிலருடைய குணத்தைக் கொஞ்சமும் மாற்ற முடியாததாய் இருக்கிறது. இன்னும் இதிலும், கடினமாகப் பதங்களைத் தேடும்படியாகி விட்டதேயென்று நமக்குவருத்தமாகத் தானிருக்கிறது. இந்த நிலையில் பிராமணரல்லாத நம்மவர்களுக்குள்ளேயே ஒருவருக்கொருவர் காட்டிக்கொடுப்பதால், விஷமஞ் செய்கிறவர்களுக்கு மிகுந்த சவுகரியமேற்பட்டுப்போய் விடுகிறது. அவரவர்களைப்பற்றி வரும்போது தான் அவரவர்கள் கவனிக்கின்றார்கள். உதாரணமாக, "சுயராஜ்யா" பத்திரிக்கை ஸ்ரீமான். நாயக்கரின் சென்னைப் பிரசங்கத்தைப்பற்றி, நாயக்கரின் குட்டிக்கர்ணமென்றும், பிள்ளையார் வேஷமென்றும், கீர்த்திக்காக தியாகம் செய்தவரென்றும், எழுதின காலத்தில், பிராமணரல்லாத மற்ற பத்திரிக்கைக்காரர்கள் பார்த்து சிரித்துக்கொண்டிருந்தார்கள். இதன் பலனைப் மற்றவர்களையும் தனித்தனியாய் ஷெ பத்திரிக்கை தாக்க ஆரம்பித்தது. இப்படியே ஒவ்வொரு சமயத்தில் ஒருவரைப்பற்றி எழுதும்போது மற்றவர் பார்த்துச் சிரிப்பதால் பொதுவாக பிராமணரல்லாதாருடைய நிலைமையே தாழ்வடையக் காரணமாய்ப் போய்விட்டதென்பதை ஒவ்வொருவரும் ஊன்றிக் கவனிக்கவேண்டும். இவ்விஷயத்தை யோசித்துப் பார்த்தால் பிராமணரல்லாத தேசத்தொண்டர்களுடையவும் தேசியத்தலைவர்களுடையவும் ஒற்றுமையின்மையும் சுயநலமுமே பிராமணரல்லாதாரை இக்கெதிக்குக் கொண்டு வந்து விட்டது. இனியாவது இம்மாதிரியான சந்தர்ப்பங்களில், பிராமணரல்லாதார் தகுந்த ஜாக்கிரதையுடன் நடந்து, பிராமணரல்லாத சமூகமும், தீண்டாதாரென்று கூறப்படுவோர்களின் நிலைமையையும், முன்னேற்றமடையச் செய்வித்து சுயமதிப்பைக் காப்பாற்றிக் கொள்ளுவார்களென உறுதியாய் நம்புகிறோம்.

---

### ஸ்ரீமான். நாயக்கர்.

ஸ்ரீமான். ஈ. வெ. இராமசாமி நாயக்கரவர்கள், அக்டோபர்மீ 31-ந்தேதியன்று, தமிழர்களின் நன்மையைக் கருதி சில கனவான்களுடன் ஆலோசனை செய்யும் பொருட்டு, சென்னைக்குப் பிரயாணமானார்.

## ஈரோடு முனிசிபாலிட்டி.

ஈரோடு முனிசிபாலிட்டியைப்பற்றி அதன் கொடுமைகளை வெளியிடாமல் கொஞ்ச நாளாக "குடி அரசு" மௌனம் சாதிப்பதாகவும் இதற்கு ஏதோ காரணங்கள் இருப்பதாகவும் சிலர் குறை கூறுகிறார்கள். மற்றும் சிலர் தற்கால முனிசிபல் நிர்வாகத்தை குறை கூற வேண்டுமென்றே பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டதாகவும் பழி சுமத்துகிறார்கள்.

இவ்விரண்டையும் நாம் பொருட்படுத்தவில்லை. நமக்கு தோன்றியதை யாருடைய விருப்பு வெறுப்பையும் லக்ஷியம் செய்யாமல் அவசியம் நேரும் போது வெளியிட்டு வருவோம். உள்ளூர் விஷயத்தில் இன்னும் பல பொது ஸ்தாபனங்களும புகாருக்கு இடம் வைத்துக் கொண்டு ஒழுங்கீனமாகவும் நடந்து வருகிறது. அவற்றில் பல விஷயங்களை பத்திரிக்கைகளில் வெளியிடாமலே திருத்திக்கொள்ளலாம் என்கிற நம்பிக்கை கொண்டே விட்டு வைத்திருக்கிறதே அல்லாமல், வேறு எவ்வித தயவுக்கோ தாக்ஷண்ணியத்துக்கோ அல்ல. இவ்விஷயமாக நிருபர்கள் அனுப்பிய பல நிருபங்கள் கூட பிரசுரிக்காமல் இருப்பதற்கும் இதுவே முக்கிய காரணம். ஆதலால் உள்ளூர் நிருபநேயர்கள் மன்னிக்கவேண்டுகிறோம்.

நமது ஈரோடு முனிசிபாலிட்டியானது மிக சிறிய முனிசிபாலிட்டி. ஆனால் வரும்படியில் கோயமுத்தூர் சேலம் முதலிய முனிசிபாலிட்டியைவிட விகிதத்தில் அதிகமானது. தற்கால நிலைமையை பார்த்தால் உண்மையாகவே வரி விகிதங்கள் சராசரி பொது ஜனங்கள தாங்கக்கூடாததாயிருக்கிறது. இப்படி தாங்கக்கூடாத வரியை பொது ஜனங்களிடம வசூலித்தும் அதை சரியான வழியில் பொது ஜனங்களுக்கு உபயோகப்படுத்தாமல் ஜனங்கள் மனம் பதறப்பதற தாறுமாறான வழியிலும் சிலருடைய சுயநன்மைக்கும சிலருடைய பிழைப்புக்குமே உபயோகப்படுத்திக் கொள்ளப்படுகின்றது. இதை சில கவுன்சிலர்கள் தெரிந்திருந்தும் இம்மாதிரி அக்கிரமங்களுக்கு உடந்தையாயிருக்கிறார்கள் என்று சொல்லுவதை மன்னிப்பார்களாக.

### சிங்காரவனம் (பார்க்)

நம் நாட்டில் ஏற்பட்டிருக்கும் பஞ்சம் உத்தியோகஸ்தர் வக்கீல்கள் தவிர மற்றவர்கள் எல்லோரும் நன்கறிந்ததே. இப்பஞ்சத்தின் கொடுமையைப் பற்றி, சென்னிமலை, கோ-வாப்ரேடிவ் யூனியன் செக்ரட்டேரி ஸ்ரீமான். எஸ். கே. ராமசாமி முதலியார் நமக்கு அனுப்பியுள்ள பஞ்ச ரிப்போர்ட்டை வேறொரு பக்கத்தில் பிரசுரித்திருக்கிறோம். இந்த விதமான நிலைமையில், தொழிலாளருக்கு தொழில் இல்லை. கூலிக்காரருக்கு கூலி இல்லை. ஏழைகளுக்கு கஞ்சியில்லை. அனேக இடங்களில் குடிக்கவே தண்ணீர் இல்லை. இப்படி இருக்க ஈரோட்டு ஜனங்களுக்கு மாத்திரம் சிங்காரவனமாம். இதற்கு ஏழை வரி கொடுப்போர் பணம் பதினாயிரக்கணக்காய் செலவு செய்வதாம். இந்த வனம்முடிவுபெற்றால் அனுபவிப்பவர்கள் யார்? வரி கொடுக்கும் ஏழைகளா? கூலிக்காரரா? தொழிலாளிகளா? ஒருக்காலும் இல்லை. இவர்களுக்கு வயிற்றுக்கு கஞ்சிக்கு வழி தேடுவதே வைகுண்டமாயிருக்கும் போது சிங்காரவனத்திற்கு போய் காற்று வாங்க நேரமெங்கே? மற்றபடி நமது வியாபாரிகள் அனுபவிக்கக் கூடுமா என்று பார்த்தால் அதுவும முடியவே முடியாது. காலையில் 6 மணிக்கு கடை திறக்கவேண்டும் சிலர் இரவு 8 மணிக்கும் சிலர் 10 மணிக்கும் கடையை பூட்டி விட்டு வீட்டுக்கு போகவேண்டும். மத்தியில் வீட்டுக்கு சாப்பாட்டுக்குப் போக ஒன்று அல்லது இரண்டு மணி நேரம் பகலில் எடுத்துக் கொள்வதையே பெரிய அன்னச்சத்திரம் கட்டுவதுபோல் நினைக்கிறவர்கள் மாலை நேரத்தில் தான் இவர்களுக்கு வியாபார மும்மரம். இந்த சமயத்தில் காற்று வாங்கப் போய்விட்டால் காலைக்கு கடன்காரனுக்கு பதில் சொல்ல வேண்டாமா? அல்லது பெரிய மிராசுதார்கள் காற்று வாங்குவார்கள் என்றாலோ, இந்தக் காலத்தில் மிராசுதார்கள் என்போர் யாரென்றால் அப்பன் தேடிவைத்த அரும் பொருளனைத்தையும்............என்று டம்பாச்சாரி சொன்னதுபோல............செலவு செய்யும் வீரர்களைத் தான் மிராசுதார்கள் என்று சொல்வது. இவர்கள் நமது நகரில் தாராளமாய் கணக்குப் போட்டாலும் ஒரு ஐந்து அல்லது ஆறு பேர்கள்தான் இருப்பார்கள். இவர்களுக்கும் மாலை நேரங்களில் பல ஜோலிகள் இருக்கும். அவற்றை யெல்லாம் விட்டு காற்று வாங்க வருபவர்கள் இரண்டொருவர்தான் இருப்பார்கள். வரி கொடுக்காத உத்தியோகஸ்தர்களாவது அனுபவிப்பார்களா என்றால் அதுவும் முடியாத காரியம் கச்சேரியில் சாதித்தது போராமல் வீட்டுக்கும் காகிதங்களை கத்தை கட்டிக் கொண்டு போவது ஆதலால் அவர்களுக்கு வழக்கமாய் போய்விட்டது.1000. 500,என்று சம்பளம் வாங்குகிற இரண்டொருவர்களைத் தவிர மற்றவர்களால் முடியாத காரியம். இந்த இரண்டொருவரும் தொழில் வரி கூட கொடுக்காமல் ஏமாற்றுகிறவர்களாயிருப்பார்கள். பின் யார்தான் அனுபவிப்பார்கள் என்று யோசித்தால் ஒரு சமயம் நமது தேசத்திற்கே பெரிய வினையாய் முளைத்திருக்கும் நமது வக்கீல் சகோதரர்கள் அனுபவிக்கலாம். அதிலும் முன்சிப் காற்று வாங்க போகாவிட்டால் பாதி பேர் போகமாட்டார்கள். டிப்டி கலெக்டரோ மேஜிஸ்ட்றேட்டோ போகாவிட்டால் கால்வாசிப்பேர் போகமாட்டார்கள். ரங்கு, பரிவா, பிரிட்ஜ் இதுகளை ஆடுவதை விட்டு அரைக்கால்வாசிப்பேர் போகமாட்டார்கள். இந்த நிலைமையில் உள்ள சிங்காரவனம் ஏழைகளின் வரிப்பணத்தை எவ்வளவு சாப்பிடுகிறது என்று கணக்குப் பார்த்தால், ஏழைகள் கஷ்டம் எப்படி இருக்குமென்றே அறியாத நமது கவுன்சிலர் பிரபுக்கள் முதல் முதலாக பார்க்கு 3000 ரூபாயில் முடியுமென்று நினைத்து 3000 ரூ. சாங்கிஷன் செய்தார்கள். 2000 ரூ. குழந்தைகள் விளையாடுமிடத்திற்கென்று சாங்கிஷன் செய்ததையும் அதற்கு உபயோகப்படுத்தாமல் கவுன்சில் சம்மதம் இல்லாமலே பார்க்குக்கு உபயோகப்படுத்தியாய் விட்டது. இதைப் பற்றியும் நமது கவுன்சிலர் பிரபுக்கள் கவனித்தவர்களே அல்ல. அல்லாமல் மாதம் 60, 70 சம்பளமுள்ள சூப்பரின்டெண்டு ஓவர்சியர்கள் வேறே சாங்கிஷன் செய்யப்பட்டது. இஃதன்றி கவுன்சில் சம்மதமில்லாமல் சம்மதத்தை எதிர் பார்த்து செலவு செய்திருக்கும் தொகை சுமார் 3000 அல்லது நாலாயிரம். இனி செலவு செய்ய சம்மதம் கேட்கும் தொகை 3000 அல்லது 4000. ஆக பதினாயிரம் ரூபாய்க்கு குறையாமல் சிங்காரவனம் விழுங்கப் போகிறது இதை நிர்வகிக்க மீ 100, 150 வீதம் வருஷத்திற்கு 2000 ரூபாய்க்கு குறையாமல் செலவாகப் போகிறது.

தாங்கள் கஷ்டப்பட்டு சம்பாதித்த பணத்தில் இருந்து ஒரு கால் அணாவாவது வரிகொடுப்பவர்களாயிருந்தால் இப்படி அக்கிரமமாய் செலவு செய்ய கவுன்சிலர்களுக்காவது சேர்மேனுக்காவது மனம் வருமா?

இவர்கள் வரி கொடுப்பவர்களின் உண்மையான பிரதிநிதிகளாயிருந்தால் இம்மாதிரி ஏழைகளின் வரிப்பணத்தை பாழாக்க சம்மதிப்பார்களா?

கவுன்சிலர் சாங்கிஷன் இல்லாமல் கவுன்சிலர் சம்மதத்தை எதிர்பார்த்து சேர்மென் செலவு செய்ததாக சொல்லும் அயிட்டங்களை இனிமேல் கவுன்சிலர்கள் ஒப்புக்கொள்ளக்கூடாது என்றும் சேர்மேனும் இனி அவ்விதம் கவுன்சில் உத்திரவு பெறாமல் எவ்வித செலவும் செய்யக்கூடாது என்றும் கொஞ்சநாளைக்கு முன்பு கவுன்சிலர்களும் சேர்மேனும் சேர்ந்து ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டார்களாம். அதற்கு பிறகு அனேக தொகைகள் இது விஷயத்தில் மறுபடியும் கவுன்சில் சம்மதத்தை எதிர்பார்த்து சேர்மனால் செலவு செய்யப்பட்டிருக்கிறதாம். சுயமரியாதை உள்ள நமது சில கவுன்சிலர்களாவது ஒப்பந்தப்படி நடக்கப் போகிறார்களா அல்லது தலையாட்டி கவுன்சிலர்களாயிருந்து ஏழைகள் பணம்தானே போகிறது நமக்கென்ன நஷ்டம், நாமும் இரண்டு மூன்று செடிகள் வீட்டுக்கு எடுத்துக்கொண்டு போகலாம் என்று நினைத்து இதையும் ஒப்புக்கொண்டுவந்து விடுகிறார்களோவென்பது அடுத்த மீட்டிங்கில் தான் தெரியவேண்டும். இம்மாதிரி மனம் பதறப்பதற ஏழைகள் பணம் பாழாவதை பார்த்துக்கொண்டு இந்த கவுன்சிலர் பதவி வகிப்பதைவிட வேறு வேலைக்குப் போனாலும் லாபமுண்டாகும்.

நமது ஊரில் எங்கு பார்த்தாலும் கொசுக்கள் உபத்திரவமும் வீட்டுக்கு வீடு குளிரும் காய்ச்சலும் வந்து அவஸ்தைப் படும் ஜனங்கள் கணக்கில்லாமல் கிடக்கின்றன. இவைகளைப் போக்கவேண்டுமானால் சுகாதார வசதியை நன்றாய் கவனித்துப் பார்ப்பதோடு இன்னும் அனேக இடங்களில் ஜலதாரைகள் கட்டவேண்டும். ஓடையில் ஜலதாரைத் தண்ணீர் தேங்கி கொசுக்களை உற்பத்தி செய்கிறது. அதன் பக்கத்தில் குடியிருப்பவர்கள் மலைக்காய்ச்சலினால் அதிக கஷ்டப்படுகிறார்கள். இவற்றை கவனிக்கப் பணம் இல்லை, ஆளில்லை. சிங்கார வனத்திற்கு மாத்திரம் ஆள்களும் பணமும் கொள்ளை போகிறது. நமது முனிசிபாலிட்டி நிர்வாகிகளின் பொதுநல அறிவையும் பரோபகாரச் சிந்தையையும் பரிசுத்தத்தன்மையையும் படியை படுக்க வைத்துத் தான் அளக்கவேண்டும். இதல்லாமல் மற்றும் அனேக வழிகளிலும் துறைகளிலும் நமது வரிப்பணம் பாழாவதை அவசியம் நேரும்போது வெளியிடுவோம்.

---

## ஸ்ரீமான். ஏ. மாதவையர்.

சென்ற மாதம் 22-ந் தேதி நடந்த சென்னை சர்வகலாசாலைக் கூட்டத்தில், பேசிக்கொண்டிருக்கும் போதே, மயக்கமுண்டாக, திடீரென கீழே விழுந்ததும், ஸ்ரீமான். ஏ. மாதவையர் இறந்து போனாரெனக் கேட்க மிகவே வருந்துகிறோம். இவர் தமிழ் மொழியின் மீது மிகுந்த பற்றுதலுடையவர். ஆசார சீர் திருத்தக்காரர். இதற்கென்றே, இவர் எழுதி வெளியிட்டுள்ள, சிறு கதைகளும், பிரசுரங்களும் பல. வேறு மொழிகலவாது, தனித்தமிழ் எழுதும் ஆற்றல் இவருக்குண்டு. சர்க்கார் உத்தியோகத்தினின்று, உபகாரச்சம்பளம் பெற்று விலகியதும், தமிழுலகிற்குத் தொண்டு புரியும் எண்ணமுடையவராக "தமிழர் நேசன்" என்ற சஞ்சிகையையும், பின்னர் "பஞ்சாமிர்தம்" என்னும் சஞ்சிகையையும் நடத்தி வந்தனர். ஐயரவர்களுடைய எதிர்பாராத மரணமானது, தமிழுலகிற்கே ஓர் பெரிய நஷ்டத்தை உண்டாக்கிவிட்டதெனக் கூறலாம். அவருடைய குடும்பத்திற்கு நமது மனமார்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

---

## "தேசோபகாரி" ஆசிரியர்.

---

இரங்கூன் "தேசோபகாரி" பத்திரிக்கையின் ஆசிரியர் ஸ்ரீமான். கே. என். சுப்பைய நாயுடு அப்பத்திரிக்கையில், ஆகஸ்டு மாதம் 21-ந் தேதி "பர்மாவை ஏழ்மைப் படுத்துவது யார்"? என்று எழுதிய ஒரு வியாசத்திற்காகவும், ஆகஸ்டு மாதம் 28-ந் தேதி அப்பத்திரிக்கையில் வெளியான "அடிமைத்தனத்தின் பயன்" என்ற மற்றொரு வியாசத்திற்காகவும், ராஜ துவேஷக் குற்றஞ் சாட்டப்பட்டு, கைதியாகி விசாரணை செய்யப்பட்டார். இவரை விசாரித்த ஜில்லா மாஜிஸ்திரேட், இ. பி. கோ. 124,ஏ. 153 ஏ. பிரிவுகளின்படி முதற்குற்றத்திற்கு முறையே 9 மாதம், 6 மாதமும் சிறைவாச தண்டனையும், இரண்டு தண்டனைகளையும் ஏக காலத்தில் அனுபவிக்க வேண்டுமென்றும், "அடிமைத்தனத்தின் பயன்" என்ற வியாசத்திற்கு 6 மாதங் கடுங்காவலும், ஆக 15 மாதம் சிறை வாசம் செய்யும்படி சென்ற மாதம் 23-ந்தேதி தீர்ப்புச் சொல்லியிருக்கிறார். இவ்வழக்கில் ஸ்ரீமான். நாயுடு எதிர் வழக்காடவில்லையென தெரிய சந்தோஷிக்கிறோம். இந்த நாட்டில் ஒத்துழையாமையைச் சேர்ந்த சிலர் ஒத்துழைப்பின் மீது நம்பிக்கை வைத்தோ, அல்லது இந்த சர்க்கார் நியாயஸ்தலங்களில் நியாயம் கிடைக்குமென்று எண்ணியோ, எதிர் வழக்காடிவரும் இக்காலத்தில். பிரிட்டிஷ் நியாயஸ்தலங்களில் நம்பிக்கையில்லையென்பதைக் காரணமாகக் கொண்டு பர்மாவில் ஓர் இந்தியர் எதிர் வழக்காடாது, தண்டனையை ஏற்றுக்கொண்டதை நினைக்கும்போது, ஒத்துழையாமையின் மணம் இன்னும் இருக்கின்றதென்றே கூறலாம். உண்மை தேசபக்தரான ஸ்ரீமான். நாயுடுவின் செய்கையை நாம் மனதாரப் பாராட்டுகிறோம்.

## சுதேச மித்திரன் பகிஷ்காரம்.

---

### கும்பகோணம் காங்கிரஸ் கமிட்டி.

---

கும்பகோணம் தாலூகா காங்கிரஸ் கமிட்டி கூட்டம் 14-10-25-ல் நடைபெற்றது. ஸ்ரீமான். தேவநாத அய்யங்கார் தலைமை வகித்தார். பின் கண்ட தீர்மானங்கள் ஏகமானதாக நிறைவேறியது:—

(1) சென்னை, "சுதேச மித்திரன்" தமிழ் நாடு காங்கிரஸ் விஷயங்களை ஒருதலைப்பட்சமாகப் பிரசுரித்து, தவறுதலான செய்திகளையும் பரப்பி வருவதால் அப்பத்திரிகையைப் பகிஷ்கரிக்க வேண்டும். (பி) இவ்வேலைக்கென்று, ஸ்ரீமான்கள். தேவநாத அய்யங்கார், கே. எஸ். வெங்கிட்டராமய்யர், ஏ. எஸ். கலியாணசுந்தர சாஸ்திரியார், ப. கு. முனுசாமி அய்யர், கே. எஸ். சுப்பிரமணிய பிள்ளை, ஜனப் பாபு சாயபு முதலியவர்களைக்கொண்ட கமிட்டியொன்று ஏற்படுத்தி, பணம் வசூலிக்கவும், துண்டுப் பிரசுரங்கள் வெளியிடவும் ஜனப் பாபுசாயபுவுக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறது.

(2) பாட்னாவில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி தீர்மானங்கள், காங்கிரஸ் நோக்கத்திற்கு விரோதமாயிருப்பதால், காஞ்சிபுரம் தமிழ் மாகாணமகாநாட்டில், இது விஷயத்தைக் கவனிக்கவேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறது.

(3) சென்னை, ஜில்லா காங்கிரஸ் கமிட்டியார், ஊக்கமுள்ள தேசாபிமானிகளாகிய, ஸ்ரீமான்கள். ஈ. வெ. ராமசாமி நாயக்கர், சுரேந்திரநாத் ஆரியா, ஆகியவர்களின் மீது செய்துள்ள கண்டனத் தீர்மானமானது, காங்கிரஸ் கொள்கைக்கும், ஒற்றுமைக்கும் விரோதமாயிருப்பதால், இக்கமிட்டியார், அத்தீர்மானத்தைக் குறித்து மிகவும் வருந்துகிறார்கள். என காரியதரிசி ஸ்ரீமான். கே. எஸ். சுப்பிரமணிய பிள்ளை எழுதுகிறார்.

---

## கோயமுத்தூர் ஜில்லாவில் பஞ்சம்.

---

சென்னிமலை, கோ-வாப்ரேடிவ் யூனியன், காரியதரிசி ஸ்ரீமான். எஸ். கே. ராமசாமி முதலியார், கோயமுத்தூர் ஜில்லா அர்பன் பாங்கி காரியதரிசிக்கு, எழுதியுள்ள பஞ்ச ரிப்போர்ட்டின் நகல் பிரதியொன்றை நமக்கு அநுப்பியிருக்கிறார். அதைக் கீழே பிரசுரிக்கிறோம்:—

சென்னிமலை யூனியன் சூப்ரவைசர் ஸ்ரீமான். ராமராஜுலு நாயுடுவின் 10-10-25உ யுள்ள பஞ்ச ரிப்போர்ட்டையனுசரித்தும் இந்திய ஊழிய சங்கத்தின் மெம்பரும் சென்னை மாகாண கூட்டுறவு சங்க மெம்பருமான மகா-ள-ள-ஸ்ரீ N. வெங்கிடசுப்பைய்யா அவர்களுடன் பஞ்ச நிவாரண வேலைக்காகச் சென்னிமலை யூனியனைச் சேர்ந்த சில கிராமங்களுக்கு நான் சென்று வந்தபொழுது நான் அறிந்துகொண்ட வரையிலும் சுருக்கமாக அடியிற் கண்ட விஷயங்களைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

சென்னிமலை பிர்க்காவில் வழக்கமாக பங்குனி, சித்திரை மாதங்களில் பெய்யும் கார்மழைகாலத்தில் சோளம், அரிசிக் கம்பு, எள்ளு முதலிய வேளாண்மையும், ஆடி, ஆவணி மாதங்களில் பெய்யும் பருவமழை காலத்தில் ராகி, மிளகாய் சோளம் முதலிய வேளாண்மையும், புரட்டாசி, அற்பசி, கார்த்திகை மாதங்களில் பெய்யும் மழையில் புகையிலை பருத்தி முதலிய வேளாண்மையும் செய்து வருவது வழக்கம். இப்படி மழை ஒத்துப் பெய்து வந்தால் கிணறுகளில் தண்ணீர் நிரம்பிக் காலா காலங்களில் செய்யும் வேளாண்மைகளுக்கு அனுகூலமாகவிருந்து வரும். இவை செழிப்பான காலத்தின் அறிகுறிகளாகும்.

சென்ற 3 வருஷங்காலங்களாக பங்குனி, சித்திரை கார் மழையும், ஆடி, ஆவணி பருவ மழையும் சொற்பமும் பெய்யாமல் நின்று போயிருக்கிறது. புரட்டாசி அற்பசி மாதங்களில் சொற்ப மழை மட்டும் வருஷத்துக்கு வருஷம் குறைந்து பெய்து வந்தது. இதன் பலனாகச் சென்ற ஆவணி மாதம் வரையில் மிகவும் கஷ்ட ஜீவனமாக உயிர் ஜீவிக்கும் அளவுக்குத்தக்கபடி சொற்ப கம்பு வேளாண்மையினால் மனிதர்கள் தங்கள் குடும்பங்களையும் கால் நடைகளையும் ஒருவாறு மெலிந்த நிலைமையிலாவது பனைஓலை. வேப்பிலை முதலிய மாட்டுத்தீனிகளைக் கொண்டும் விறகு விற்றும், கூலி செய்தும் பாது காத்து வந்தனர்.

சென்ற 2 மாத காலங்களாக அநேக கிணறுகள் முற்றும் தண்ணீரின்றி வரண்டு போயின. சில கிணறுகளில் ஊறும் ஊற்று ஜலம் தாகசாந்திக்குக் கூட சரிவரக் கிடைக்காமல் இருக்கிறது. இதன் பலனாக தென்னை, கொளுமிச்சை முதலிய நீண்ட நாள் காப்பாற்றப்பட்டு வந்த மரங்களும் உயிர் விட்டும், உயிர் விடும் தருவாயிலுமிருந்து வருகின்றன.

சென்ற 3 வருஷகாலங்களாக புரட்டாசி, அற்பசி மாதங்களில் பெய்து வந்த சொற்ப மழையும் இவ்வருஷம் நாளது வரையில் பெய்யவில்லை. இனியாவது பெய்யுவதற்குள்ள அறிகுறிகளும் தோற்றவில்லை. இம்மழை அற்றுப்போய் விட்டால் மனிதர்களும் கால் நடைகளும் உயிர் வாழ்வதற்கு இன்றிமையாத தண்ணீரும் சொற்ப ஆகாரமும்கூட இந்த பிர்க்காவில் உள்ள ஜனங்கள் சுயமாகத்தேடிக்கொள்ள முடியாத நிலைமையிலிருந்து வருகிறார்கள்.

இந்த நிலைமையில் முன் பட்ட கடன்களுக்கு முதலாளிகள் கோர்ட் மூலமாகச் செய்யும் ஹிம்சையும் சொல்லத்தரமல்ல. சுற்றுப்பக்கங்களில் ரோடுகளில் நடமாடும் ஜனங்களுக்கும், பட்டிகளில் அடைபட்டிருக்கும் கால் நடைகளுக்கும் திருடர் பயமும் அவர்களின் இம்சையும் நாளுக்கு நாள் அதிகமாசிக் கொண்டு வருகிறது. கிராமங்களில் உள்ள குடிகளில் பலர் கூலி செய்து ஜீவிப்பதற்காக பொள்ளாச்சி முத

விய வெளியிடங்களுக்குச் சென்று விட்டனர்.

இந்த நிலைமையில் ஆதிதிராவிடர்கள் உட்பட சில தாழ்ந்த வகுப்பினர் தங்களுக்கென்று சுயமான குடி கிணறு இல்லாமலும், இருக்கும் சில கிணறுகளிலும் தண்ணீரின்றி வரண்டு போய் விட்டதினாலும் அவர்கள் தாகசாந்திக்கு தண்ணீருக்குப் படும்பாடு சொல்ல முடியாது. அவர்கள் ஜீவனோபாயத்துக்கு யாதொரு வழியுமில்லை. காடுகளிலும் மலைகளிலும் வளர்ந்திருக்கும் கள்ளி கத்தாளைப் பழங்களைப் பெரும்பாலும் தின்று உயிர் ஜீவிக்கின்றனர். இவர்களிலும் அநேகம் குடிகள் வெளியூருக்கு சென்று விட்டனர்.

இந்திய ஊழியச் சங்கத்தார் புதுப்பாளையம் என்னும் கிராமத்தில் அதன் சமீபத்திலுள்ள கிராமங்களின் ஆதிதிராவிடர்கள் முதலிய பரம ஏழைகள் யாவரும் உயிர் ஜீவிக்கும் பொருட்டாக முதல் தடவையாக 3 மைல் நீளமுள்ள ஒரு இட்டேரியை ரிபேர் செய்து வரும்படிக்கும் அதில் வேலை செய்யும் ஏழை ஆள் 1 க்கு தினப்படி 1½ படி ராகியும் அரையணாவும், பெண் 1 க்கு 1 படி ராகியும் அரையணாவும் கொடுத்துவும் பொருட்டு இந்த பிர்க்காவின் சென்டராக சென்னிமலையில் ஒரு பஞ்சநிவாரண கமிட்டி அமைக்கப்பட்டு தற்காலமாக பொருளுதவி செய்திருக்கின்றனர். பொது ஜனங்களையும் இக்கமிட்டிக்குப் பொருளுதவி செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

இக்கமிட்டியில் மா-ா-ா ஸ்ரீ குரு மூர்த்தி செட்டியார் அவர்கள் பிரசிடெண்டாகவும், நான் செக்ரெடரியாகவும் தெரிந்தெடுக்கப்பட்டு பிரஸ்தாப வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

எவ்வளவு தூரம் தாராளமாய்ப் பொருளுதவி கிடைக்கிறதோ அவ்வளவு தூரம் பிரஸ்தாப வேலையும் நீடித்து வரும். பிரஸ்தாப கமிட்டிக்கும் தங்களாலான உதவியைச் செய்யக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இனி சென்னிமலையில் யூனியன் அணைக்கப்பட்டுள்ள சங்க மெம்பர்களுக்கு எவ்வாறு உதவி செய்யலாமென்ற அடியிற் கண்ட சில விஷயங்களைத் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அந்த விஷயங்களில் தாங்கள் மனப்பூர்த்தியாகவும், தாராளமாகவும் கூடிய உதவியைச் செய்ய முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

பிரஸ்தாப சங்கங்களில் பல பெரும்பான்மையும் பஞ்சத்தால் பிடிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளில் பெரும்பான்மையாக 5 வருஷ நீண்டகாலக் கடன்கள் தான் கொடுக்கப்பட்டு வந்திருக்கின்றது. இவற்றில் சென்ற வருஷத்தில் சில சங்கங்கள் தவணையைச் செலுத்த முடியாமல் வாய்தாக்கடக்க விட்டும், சில அடுத்த வருஷத்திற்குச் செலுத்துவதாக ஒரு வருஷத்தவணை நீடிக்கப்பட்டுமிருக்கின்றன. ஆனால் இவ்வருஷமுள்ள நிலைமையில் சங்கங்கள் தம் கடன்களை திருப்பிச் செலுத்த முடியாமல் இருக்கிறது. இவை நிற்க புதிய கடனும் கோருகின்றன.

இந்த நிலைமையில் வாய்தாக்கள் தவறுமல் இருக்கும் பொருட்டும் மெம்பர்களும் தங்கள் கடன்களைச் சிரமமின்றி திருப்பிச் செலுத்தும் பொருட்டும் தற்காலம் சங்கங்களின் பேரில் பாக்கி நிற்கும் கடன்களை 10 வருஷ நீண்ட காலக்கடன்களைக்கைப் புதுப்பித்துக் கொடுப்பது மிக்க உதவியாக விருக்கும்.

இதுவரை சங்கங்களில் கடன் பெற்றிருப்பவர்களுக்கும் இனிப்புதிதாகச் சேர்ந்து கொள்ளுபவர்களுக்கும் ஒரு வருஷ காலத்துக்குப் போதுமான உணவு தானியங்களுக்கும் கிணறு முதலியன வெட்டுவதற்கும், முன் கடன் தீர்ப்பதற்கும் நீண்டகாலப் புதிய கடன்கள் கொடுத்து உதவி செய்யவேண்டும்.

உணவுச் செலவிற்காகக் கொடுக்கும் கடன்கள் ரூபாய் இல்லாமல் தானியமாக (சோளம்) கொடுத்தால் அது ஏழைகளுக்குப் பெரிய உதவியாக விருக்கும்.

இம்மாதிரியான உதவிகள் சென்னிமலை யூனியனில் அணைக்கப்பட்டுள்ள எல்லாச் சங்கங்களுக்கும் தேவையிராது. பஞ்சத்தினால் மிகவும் பிடிக்கப்பட்ட கிராமங்களிலுள்ள குறிப்பிட்ட சங்கங்களுக்கு உதவி செய்தால் போதுமானது. எந்தெந்த சங்கங்களுக்கு இப்படிப்பட்ட உதவி தேவையாயிருக்குமென்று நேரில் பார்வையிட்டும், விஜாரிக்கப்பட்டும் வருகிறது. முன்னிட்ட கடன் அளவு, தற்காலம் கோரும் கடன் அளவு, சங்கத்தின் நிலைமை முதலியன விபரமாக விசாரணை முடிந்ததும் அனுப்பிவைக்கிறேன்.

ஐக்யர்களுக்கு ஐக்யர்கள் உதவி செய்வதற்கும் உதவியை நாடுவதற்கும் இதைக்காட்டிலும் ஒரு நல்ல சந்தர்ப்பம் கிடைப்பது அரிது. இப்படிப்பட்ட சமயங்களில் வேலை செய்யவும் உதவி செய்பவும் பொறுத்தமானது ஐக்ய இயக்கம் தான். ஐக்ய இயக்கத்தில் கடன் கொடுப்பதிலுள்ள சில கடின விதிகளையும் முறைகளையும் அனுசரித்தால் ஏழை ஐக்யர்கள் இந்த சமயம் எவ்வித உதவியையும் பெறமுடியாமல் கொடுமையான கஷ்டத்திற்கு ஆளாவார்கள். ஆகையால் கூடுமானவரை எந்த வகையில் உதவி செய்ய வேண்டுமென்பதை முக்கியமாக வைத்துக்கொண்டு மற்றவைகளைப் பின்னுகத் தள்ளவேண்டும்.

தற்கால பஞ்சத்தின் கொடுமைக்கு இந்த மாதம் மத்தியகாலமாக விருக்கிறது. பஞ்சத்தின் ஆரம்ப கஷ்டம் ஜனங்கள் அனுபவித்தாகி விட்டது. பஞ்சத்தின் மத்திய காலக் கொடுமை நடந்துகொண்டிருக்கிறது. ஆனதால் இந்த மாத முடிவிற்குள் நாம் செய்ய வேண்டிய உதவியை அவர்களுக்குச் செய்து விடுவதுதான் சிலாக்கியமாக விருக்கும். காலம் தவறி உதவி செய்வதில் அவர்களுக்கும் பிரயோஜனமில்லை. அதனால் நமக்கும் அனுகாபமும் இல்லையென்ற முடிவு தான் ஏற்படும்.

ஆகையால் மேலே சொன்ன விஷயங்களுக்குத் தங்கள் ஆதரவையும், அனுதாபத்தையும் எவ்வளவு சீக்கிரம் தெரிவிக்கக் கூடுமோ அவ்வளவு சீக்கிரம் தெரிவித்தால் அதற்கான வேலைகளை செய்ய மிகவும் சௌகரியமாயிருக்கும். ஆகையால் தயவு செய்து உடனே தெரிவிக்கக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

## மகாத்மாவின் வாசகம்.

### நாடகம் ஆடுபவர்களுக்கு.

மகாத்மா காந்தி அக்டோபர் 8வ வெளியான 'எங் இந்தியா'வில் தமது பீஹார் சுற்றுப் பிரயாணத்தைப்பற்றி எழுதி வருகையில் குறிப்பிடுவதாவது:— ராஞ்சியில் தேசபந்து நிதிக்குப் பணம் சேர்ப்பதற்காக இரண்டு நாடகங்கள் நடத்தப்பட்டன. இரண்டும் தொழிலுக்காகவன்றி சந்தோஷத்துக்காக நடிப்பவர்களால் நடத்தப்பட்டன. ஆகையால் அந்நாடகங்களுக்குச் செல்ல இசைந்தேன். இவற்றுள் ஒரு நாடகம் வங்காளிகளாலும், மற்றொன்று பீகாரிகளாலும் நடத்தப்பட்டன. வங்காளிகளின் நாடகம் எனக்குப் பெரும் ஏமாற்றத்தையளித்தது. தொழில்காரர்களால் நடத்தப்படும் நாடகத்துக்கும் இதற்கும் எவ்வித வித்தியாசமுமில்லை. உடைகள் எல்லாம் அன்னியத்துணியாலானவை. முகங்களுக்கு வர்ணங்களும் பூசப்பட்டிருந்தன. ஆகவே பீகாரிகளின் நாடகத்துக்குப் போவதற்கு முன்னால் ஒரு நிபந்தனை விதித்தேன். இந்த நாடகத்துக்கு மட்டுமன்றி அவர்கள் இனிநடக்கும் எல்லா நாடகங்களுக்கும் கதர் உடையே உபயோகிப்பதாக உறுதிகூறினால் தான் நாடகத்துக்கு வர முடியுமென்று சொன்னேன். அவர்கள் இந்த நிபந்தனையை ஏற்றுக்கொண்டு நிறைவேற்றியது எனக்கு மகிழ்ச்சியையளித்தது. சந்தோஷத்துக்காக நாடகம் நடிப்பவர்கள் அனைவரையும் இவர்களுடைய உதாரணத்தைப் பின்பற்றும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். தொழிலாக நடிக்கும் கம்பெனிக்காரர்களும் தேசபக்தி கொண்டவர்களானால் உடை விஷயத்தில் இந்த மாறுதலை ஏற்று இந்தியாவின் ஏழைமக்களுக்குச் சிறந்த உதவி செய்யலாம்.

## ஒத்துழையாமையின் பலன்.

அதே பத்திரிகையில் ஸ்ரீமான். ஆண்ட்ரூஸ் தமது ஆந்திர தேசத்துப் பிரயாணத்தைப் பற்றி எழுதுகையில் கூறுவதாவது:—ஒத்துழையாமை இயக்கத்தின் தீவிர வேகமும், கிளர்ச்சியும், உற்சாகமும் இப்போது அடங்கிவிட்டன. ஆனால் அவ்வியக்கம் தனக்குப் பின்னால் நல்ல பலன்களை விட்டுச் சென்றிருக்கிறதென்பதை அனைவரும் ஒப்புக்கொள்கின்றனர். முன்னெக்காலத்திலும் இல்லாத அளவுக்குக் கிராமவாசிகள் இப்போது விழிப்படைந்திருக்கின்றனர் என்று ஒத்துழையாமையின் விரோதிகளும் கூறுகிறார்கள். ஒரு கிழவர் இதை விளக்க ஒரு பொருத்தமான உதாரணம் கூறினார். "கோதாவரி நதியில் திடீரென்று பெரும் வெள்ளம் வந்ததுபோல் ஒத்துழையா வெள்ளம் பெருக்கெடுத்து வந்தது. அவ்வெள்ளத்தில் நாங்கள் எல்லோரும் அடித்துக் கொண்டு போகப்பட்டோம். இப்போது வெள்ளம் அடங்கிவிட்டது. ஆனால் பூமிக்குச் செழிப்பளிக்கும் வண்டல் மண்ணை அது பின்னால் விட்டுச் சென்றிருக்கிறது" ஆந்திர தேசத்தில் மட்டுமன்று, மற்றும் நான் சுற்றுப்பிரயாணம் செய்த அஸாம் முதலிய மாகாணங்களிலும் சமூகத் தொண்டுக்கு ஏற்ற நிலைமையும் சந்தர்ப்பங்களும் ஏற்பட்டிருப்பதை நான் பார்த்தேன். சில வருஷங்களுக்கு முன் இத்தகைய நிலைமையைக் கண்டிருக்க முடியாது.

## விசேஷ கவனிப்பு.

### அபிநவ
### ஆங்கில போதினி.


இங்கிலீஷ் படிக்கவில்லையே என்ற கவலை வேண்டாம். தங்கள் சொந்த ஜோலிகளுக்கிடையூறின்றி பொது ஜனங்கள் யாவரும் இங்கிலீஷ் பாஷையில் ஆட் பெயர், ஊர்ப் பெயர் முதலியவைகளையும் சகல விதமான தந்தி விஷயங்களையும், லெட்டர்கள் மேல் விலாசங்கள் எழுதும் விதங்களையும், இங்கிலீஷ் இலக்கணத்தின் முக்கியாம்சங்களையும் அதி சீக்கிரத்தில் கற்றுக்கொள்ளக்கூடியதும், அனுபோகத்தில் பிரயோஜனமுள்ளதென்று பொதுஜனங்களால் போற்றப் படுகிற புஸ்தகமிதுவே. சென்ற 12 வருஷங்களாய் ஆயிரக் கணக்கான புஸதகங்கள் செலவாய் இப்பொழுது 10-வது தடவை மறுபடியும் அச்சிட்டிருக்கிறோம். புஸ்தகம் 1-க்கு விலை அணு **0—12—0** வி. பி. சார்ஜ் அணு **4**

V. S. K. சுவாமி அன்ஸன்ஸ்.
புக்செல்லர்ஸ், விளாத்தி குளம்
Via. கோயில் பட்டி S. I. R.



## இனம்! உயர்ந்த பெரிய டேபில் கெடியாரம் இனம்!!

### தி "வேம்லி" ரிஜிஸ்டர் செய்த உயர்ந்த பொன் நிப்புள்ள பவுண்டன் பேனு 1-க்கு ரூ. 3-8-0



**நமது கிங் ஜார்ஜ் இளவரசரால் பரிசோதிக்கப்பட்டது.**

300 நற்சாக்ஷி பத்திரங்கள் கொண்டது! இந்த பவுண்டன் பேனு வால்கனேட் உறையுள்ளதும், 14 காரட் (கோல்ட்) நிப்புள்ளதும், எழுத்துவேலைகள் சுரு சுருப்பாய் எழுதுவதற்கும் நெடுநாள் வரை உழைக்கக்கூடியதும் உயர்ந்த நிக்கல் கிளிப்புடன் பார்வைக்கு அதிக கெம்பீரமாயும், ரூபாய் 10 மதிப்பிடக்கூடியது, இப்பேனுவைப்போல் இதுவரையில் கண்டு இருக்கமாட்டீர்கள் எனக்கருதவும். மேற்படி பேனு 1-க்கு ரூபா 3-8-0க்கு வாங்குவோர்க்கு பெரிய டேபில் டைம்பீஸ் இலவசமாய் தரப்படும். இரண்டு பேனு ரூ 7-க்கு வாங்குவோருக்கு 18 காரட் ரோல்டு கோல்டு பூவேலை செதுக்கிய உன்னத பாக்கட் கெடியாரம் இலவசமாய் தரப்படும். டேபில் டயம்பீஸ் தனிவிலை ரூ. 4-8-0 ஷை பாக்கட் கெடியாரம் தனியாய்விலை ரூ. 8-8-0. கெடியாரங்களுக்கு 5 வருஷம் காரண்டியுடன் அனுப்பிக்கப்படும். தருவித்தது திருப்தியில்லாதவர்கள் திருப்பியனுப்பி தங்கள் பணத்தை வாப்பீஸ் பெறலாம்.

ஓ. எம். வீ. கம்பெனி,
(23-பீட்) மதராஸ். கு



## "தேசோபகாரி"

பர்மாவில் விதேலை முழக்கஞ் செய்துவரும்
ஓர் தமிழ் வாரப்பதிப்பு.
வருஷ சந்தா ரூபாய் ஐந்து.

மானேஜர்,
"தேசோபகாரி" லிமிடெட்.
45-36வது வீதி, ரங்கூன்.



## "தேசபக்தன்"

ஓர் தேசீயத்தமிழ் பத்திரிகை.
பிரதி திங்கள், புதன், வெள்ளிதோறும் வெளிவருவது
விளம்பரத்திற்கேற்றது.
வருடசந்தா ரூபாய் 13. வெளிநாடுகளுக்கு ரூபாய் 16.

காரியஸ்தர்,
"தேசபக்தன்" கொழும்பு.



**28** வருடங்களாய் உலகப்பிரசித்திபெற்ற
வைத்யரத்ன பண்டிட்.

## D. கோபாலாசார்லு அவர்களின்

திவ்ய அவுஷதங்கள்.

காலரா அவுஷதங்கள், ப்ளேக் அவுஷதங்கள்
ஒருமுறை உபயோகித்தால விஷபேதியும், ப்ளேக்கும் பறந்தோடும்

### ஜீவாம்ருதம்.

தேகபலம், மனோசக்தி, இந்த்ரிய புஷ்டியைக் கொடுத்து தேக வலிவை யளிக்கும். விலை ரூ. 3—4—0

### ப்ருகுவடி.

எக்காரணத்திலுண்டான தாது நஷ்டத்தையும், மேகவெட்டை முதலிய கொடூர வியாதிகளை அறவே யொழிக்கும்.
புட்டி 1க்கு ரூபாய் 2—0—0

### வித்தமகரத்வஜ.

நபும்சகத்தை வேருடன் துலைத்து இந்திரிய புஷ்டி கொடுத்து வஜ்ரதேகிகளாகச் செய்யும்.

## ஆயுர்வேதாஸ்ரமம்.

கோவிந்தப்ப நாய்க்கன் தெரு.
காந்திநகர், மதராஸ்.



வெள்ளியை கொடுத்து தங்கத்தைப்
பெறுங்கள்.
வந்தாலும் போனாலும் சரி என்ற
லாட்டரி இல்லை.
கைமேல் பலன் கிடைக்கும்
இது ஹம்பக்கில்லை.
பட்ட பகல் போல் வெட்ட வெளிச்ச
மானது
ஒரு ரூபாய் வெள்ளி நாணயமாகக்
கொடுத்தால் 32

## ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்.

பெறலாம்.

அதனை உபயோகித்தவர்கள் அது "தங்கத்திற்குச் சமமான நிறையுள்ளதென்று" கூறியிருக்கின்றனர். மனத்திலும், தேகத்திலுமுள்ள கோளாறுகளைப் போக்கடித்துப் பலஹீனம் அஜீரணம் முதலிய வியாதிகளை சாஸ்தமாக கண்டிக்கின்றது.

விபரம் வேண்டுவோர் இன்றே கிரைய ஜாப்தாவுக்கு எழுதுங்கள்.

ஆதங்க நிக்ஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே மதராஸ்.

உண்மையான  கெட்டி

கதர். யானகதர்.

கதர் வாங்குகிறவர்கள் விலையை கவனிப்பதுடன் சரக்கு அழுத்தத்தையும், நயத்தையும், கெட்டியையும் கவனிக்கவேண்டியது முக்கியமான கடமை. தமிழ்நாடு காங்கிரஸ் கதர் போர்டாரின் உதவியாலும், மேற்பார்வையாலும், அத்தாட்சிப் பத்திரத்துடனும் நடை பெறுகின்றது. கதர் போர்டாரின் விலைக்கே விற்கப்படும்

காங்கிரஸ் அத்தாட்சிப் பத்திரம்

ஸ்ரீ காந்தி கதராலயத்தார் கைநூலால் கைத்தரியால் தயார் செய்யப்பட்ட உண்மையான கதர் உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்கிறார்கள்.

வா. மு. தங்கப்பெருமாள், காங்கிரஸ்கதர் போர்டு காரியதரிசி.

ந. ராமசாமி,

மானேஜர், ஸ்ரீ காந்தி கதராலயம், திருப்பூர்.

வந்தேமாதரம்.

## கரூர் சுயம் கத்தர் ஜவுளிகள்.

தமிழ் நாட்டு கத்தர் போர்டாரால் நற்சாக்ஷி பத்திரம் பெற்ற கீழ்கண்ட கத்தர் ஸ்டோரில் உடை நாணயத்திலும் நெசவு அழுத்தத்திலும் நீடித்து உழைக்கக்கூடியதுமான பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், அங்கவஸ்திரம், வெள்ளை பீஸ்கள், ஷர்டிங், கோட்டிங், சால்வைதினுசுகள் கத்தர் போர்டின் விலைக்கே விற்கப்படும். தேவைக்கு அட்வான்சுடன் ஆர்டர் செய்யுங்கள்.

S. ராமசாமி அய்யர்,

ராமவிலாஸ் கத்தர் ஸ்டோர்ஸ் கரூர்.

அத்தாட்சிப்பத்திரம் (தமிழ்நாட்டுக் காங்கிரஸ் கமிட்டி) ஸ்ரீமான் எஸ். ராமசாமி அய்யர் ராமவிலாஸ் கத்தர் ஸ்டோர் கைநூலால் கைத்தரியால் தயார் செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுக்கொண்டிருக்கிறார்.

(ஒப்பம்) வா. மு. தங்கப்பெருமாள்,

காரியதரிசி கத்தர், இலாகா.

இனும்! இனும்!!

நூறு வருஷத்திய காலண்டரும், புஸ்தகசமாச்சாரங்களடங்கிய பத்திரிகையும் தபால் செலவின்றி அனுப்புவோம். ஸ்ரீ சாது ரத்ந சற்குரு புத்தகசாலை,

பார்க்டவுன் (P. O) சென்னை.

பெயர் பெற்ற ஊத்துக்குளி சுத்தக்கத்தர்.

50x16குஞ்சம் அச்சில் நெசவு அழுத்தமும் நயமுள்ளதாயும் கதர்போர்டின் விலைக்கு விற்கப்படும். வேஷ்டி, துண்டு, காந்திரெழை கலர் வெள்ளைக் கோட்டிங் மற்ற எல்லா தினுசுகளும் கிடைக்கும். விலைவிபரங்களுக்கு எழுதவும். அட்வான்சுடன் ஆர்டர் செய்யுங்கள். K. V. குப்புசாமி அய்யர்,

கதர் வியாபாரம், ஊத்துக்குளி, S. I. R.

# இம்ப்ரூவ்ட் லீவர்

## பாக்கெட் கெடியாரங்கள்.

ஓவர்லண்ட் பாக்கெட் கெடியாரம் நிக்கில் கூடு, தம்பு தூசி நுழையக்கூடாத மூடியுள்ளது. பிரத்யேகமாய் தருவித்த உயர்ந்த நிக்கு கண்ணாடியுள்ளது. 6 லீவர்களுள்ளது. அழகான பெட்டியுடன் ஒரு சங்கிலியும் விலை ரூ. 8—12—0.

பெஸ்ட் பேடண்டு லீவர் வாட்சு விலை ரூ. 4—12—0

(Fido) பிடோ லீவர் கெடிகாரம் சிறிய ரூபம், மிக்க உறுதியானது, அழகுள்ள நிக்கல் கேஸில் அமைந்தது. நேர்த்தியான உறுதியுள்ள அமைப்புள்ளது. உத்திரவாதமுள்ள, டெஸ்ட் செய்த எங்கள் சாமான்களை வாங்குங்கள். எங்கள் நாணயமும் நம்பிக்கையுள்ளதுமான வர்த்தகஸ்தலத்தின் கியாதி ஒரு முறை பரீட்சித்தால் விளங்கும் தயவுசெய்து ஒரு முறை பரீட்சியுங்கள்.

## ஜாலால் அண்டு சன்ஸ்,

வெஸ்டு அண்டு கெடியாரம் வியாபாரிகள்,

61, ராட்டன் பஜார், சென்னை.

கலியுகத்தில் "ஓர் மகானின் - மகிமை"
மகத்துவமுள்ள மகானால் கலியுக கற்பகமாக
விளங்கும்,
"அருமையான மூலிகையும்"
"தாயத் என்னும் ரட்சையும்"
(எந்த மதஸ்தர்களும் உபயோகிக்கத் தக்கவை.)

குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை, ஆண் பெண் இருதாரத்தார்களுக்கும் உண்டாகும் பலவித நோய்களும், பார்வை, தோஷங்களும், பலவித குஷ்டம், க்ஷயம், வலிப்பு, இளைப்பு, பிர்மை, பைத்தியம், வாத நோய்கள், மேகசம்மந்த வியாதிகள், விஷத்தாலேற்படும் பலவித வியாதிகள் முதல் தீராதென்றெண்ணி சகலவிதமான வியாதிகளும், செய்வினைகளும் கவலைகளும் ஆச்சரியமாகும்படி பூரணகுணமாகியிருப்பதையும்,

நீண்டநாளாக புத்திரபாக்கியமில்லாதிருந்த அனேகருக்கு புத்திரபாக்கியம் உண்டாயிருப்பதையும், அபாரமான காரியங்களெல்லாம் வெற்றியடைந்திருப்பதையும் ஸ்பெஷல் தாயத் என்னும் (ரட்சையால்) கவலைகள் நீங்கி, ஒவ்வொருக்கும் கோரிய காரியங்கள் நிறைவேறியிருப்பதையும்,

இந்த நிமிஷமே பார்க்கலாம்.

ஏராளமான சகலதேசத்தார்களின் நற்சாட்சிகளாலும் காணலாம். தமிழ்வைத்திய சங்கத்தில்

தங்கமெடலும், நற்சாக்ஷியும் பெற்றவை.
அன்புள்ள சகோதர சகோதரிகளே!
கவனியுங்கள்!!

இந்த சமயத்தை கைவிடாதீர்கள். இதுவே நல்ல காலமாகும். வேண்டியவர்கள் உங்கள் முழு விலாசத்தோடு எதற்காக தேவையிருந்தபோதிலும் ஆரம்ப முதல் சரிவர விபரமெழுதி, பதிலுக்கு (ஸ்டாம்பு) வைத்து கோயமுத்தூர்ஜில்லா மேட்டுப்பாளையம் "பாலசந்திரன் ஆபீஸ்" தலைவர் ஸ்ரீமான் எஸ். எ. கே. பிள்ளை அவர்களுக்கு எழுதிக்கொள்வீர்களானால் விபரமான பதிலும், சகல விபரமும் அனுபந்தங்களும் கிடைக்கும்.

எவ்வித வியாதிகளுக்கும் பத்தியமில்லை.

☞ எந்த தேசத்திய ஸ்டாம்புகளும் அனுப்பலாம்


ஈரோடு டைமண்ட் பிரஸில் அச்சிடப்பெற்று ஈ. வெ. ராமசாமி நாயக்கரால் வெளியிடப்பட்டது.